Registered as a NewsPaper

விலை ரூபா:10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | புரட்டாதி-31 | 17-10-2005 | திங்கட்கிழமை | ஓசை-242



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-12957) விநாயகர் வீதி, மயிலிட்டி.

# வவு. தமிழ் தேசிய எழுச்சிநாள் சிறப்புற நடத்துவதற்கு ஏற்பாடு

## பல்வேறு அமைப்புக்களுடனும் கலந்துரையாடல் வீடு வீடாகச் சென்று பரப்புரை

(வவுனியா செய்தியாளர்)

**வவுனியா தமிழ் தேசிய எழுச்சிப் பிரகடனத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில் எதிர்வரும் 27 ஆம் திகதி வவுனியாவில் நடைபெறவுள்ள தமிழ் தேசிய எழுச்சி நாளை சிறப்புடன் நடத்த துரித ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பல்வேறு அமைப்புக்களுடனும் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் வீடு வீடாகச் சென்று மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.**

இது தொடர்பான ஏற்பாடுகளைச் செய்வது தொடர்பாக வவுனியா கல்விச் சமூகத்துடனான கலந்துரையாடல் ஒன்று நேற்று புளியங்குளம் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

காலை 10.00மணிக்கு நடைபெற்ற இக்கலந்துரையாடலில் வவுனியா வடக்கு, தெற்கு ஆகிய கல்வி வலயங்களின் கோட்டக்கல்வி அலுவலர்கள், அதிபர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் தமிழ், முஸ்லிம் இனங்களைச் சேர்ந்த 200 இற்கும் அதிகமான கல்விச் சமூகத்தினர் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டனர். பிற்பகல் 1.00 மணிக்கு நடைபெற்ற கலந்துரையாடலில் வவுனியா தேசியக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## விகாரைக்கு அருகில் வெடிகுண்டு கண்டுபிடிப்பு

(கொழும்பு)

கொழும்பு பெர்குசன் வீதியில் உள்ள பௌத்த விகாரைக்கு அருகாமையில் வெடி குண்டொன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

வெடிகுண்டு வைக்கப்பட்ட இடத்திலிருந்து 300 மீற்றர் தொலைவில் சிறிலங்கா இராணுவ முகாம் அமைந்துள்ளது. செயலிழக்கப்பட்ட வெடி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு விமான நிலையத்தில் விபத்து; இந்தோனேஷியப் பெண் பலி;7 பேர் காயம்

(கொழும்பு)

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச விமான நிலையத்தில் ஏற்பட்ட விபத்தில் இந்தோனேஷியப் பெண் ஒருவர் உயிரிழந்தார்.மற்றும் ஏழு பேர் படுகாயமடைந்தனர்.

சிங்கப்பூரிலிருந்து சிறிலங்காவுக்கு வந்த விமானத்திலிருந்த பயணிகள் வெளியேறிக் கொண்டிருந்த போது விமான நிலைய ட்றக், விமானத்தில் மோதியதில் இந்த விபத்து நடந்ததாக சிறிலங்கா விமான நிலைய பேச்சாளர் சந்திராடி சில்வா தெரிவித்தார்.

இரண்டு அவுஸ்திரேலியர்கள், இரண்டு இந்தியர்கள்,மூன்று இலங்கையர்கள் ஆகியோர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.விமான நிலைய ட்றக் ஓட்டுநரைக் கைது செய்திருப்பதாகவும் சிறிலங்காப் பொலிசார் தெரிவித்தனர்.

## இனந்தெரியாதோர், இராணுவம் மோதல் இரு படையினர், இரு பொதுமக்கள் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனை வீதி சுங்காங் கேணியில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இனந்தெரியாத ஆயுதக்குழுவினருக்கும் இடையே நடைபெற்ற மோதலில் இரண்டு இராணுவத்தினரும் பொதுமக்கள் இருவரும் காயமடைந்துள்ளனர்.

நேற்றுமாலை ஆறு பதினைந்து மணியளவில் நடைபெற்ற இந்த மோதலின்போது நாகராசா விஜயா (வயது 18) சின்னத்தம்பி கண்ணகி (வயது 35) என்பவர்களே காயமடைந்த பொதுமக்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## தமிழ் செய்தி தகவல் மையம் யாழில் நேற்று அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியில் 'தமிழ்செய்தி தகவல் மையம்' நேற்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. இதன் அலுவலகத்தை மூத்த பத்திரிகையாளர் எஸ்.எம் கோபாலரத்தினம் (கோபு) அவர்கள் முற்பகல் 11மணிக்கு நாடாவை வெட்டித்திறந்து வைத்தார்.

யாழ்ப்பாணத்தைத்தளமாகக் கொண்ட ஒரு செய்தி நிறுவனமாக இது இயங்கவுள்ளது. அதேவேளை பொருளாதார ரீதியாக நலிவுற்றிருக்கும் பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்களுக்கு உதவுவதும் இதன்நோக்கமாகும்.

இந்த நிறுவனத்தின் அங்குரார்ப்பண நிகழ்வில் பெயர்ப்பலகையினை யாழ்.

(12 ஆம் பக்கம் பார்க்க)





## மன்னார் விக்ரர் பாசறையின் ஐந்தாவது தற்காப்பு அணி பயிற்சி

(மன்னார்)

மன்னாரில் லெப். கேணல் விக்ரர் பாசறையின் ஐந்தாவது மக்கள் தற்காப்பு அணிக்கான பயிற்சி நடைபெற்றுள்ளது.

மன்னார், கறுக்காய் குளத்தில் இப் பயிற்சி நடைபெற்று நிறைவு பெற்றுள்ளது. இதன்போது 220 பேர் இத் தற்காப்புப் பயிற்சியைப் பெற்றுக்கொண்டனர்.

தொடர்ச்சியாக இப் பயிற்சிகள் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

## ரணில்-சந்திரிகா அடுத்தவாரம் சந்திப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும் இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெறவுள்ளது.

அடுத்த வாரத்தில் நிகழவுள்ள இந்தச் சந்திப்பின்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலான தேசிய நிலை கருத்து ஒற்றுமை, மற்றும் எதிர்வரும் சனாதிபதித் தேர்தல் என்பவை தொடர்பில் பேசப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஏற்கனவே சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்வரும் 20 ஆம் திகதிக்கும் 27 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட தினத்தில் சந்திக்குமாறு கடிதம் மூலம் கோரியிருந்தார்.

இந்த நிலையில் எதிர்வரும் 24 ஆம் திகதியன்று சனாதிபதிக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மூன்றுமாடிக் கட்டடத்தில் தீ விபத்து; திருகோணமலையில் சம்பவம்

திருகோணமலையில் மூன்றுமாடிக் கட்டடத்தில் நேற்று மாலை பாரிய தீ விபத்து ஏற்பட்டுள்ளது.



திருகோணமலை பிரதான வீதியில் 212ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள தங்கராசா மூன்று மாடி கட்டடதல் அமைந் துள்ள வசீகரன் ரேடேர்ஸ் என்ற கடையில் தீவிபத்து ஏற்பட்டுள்ளது.

சிறிலங்காப் படையினருக்குச் சொந்தமான தீ அணைக்கும் 12 வண்டிகள் அத்தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தன.

## சாவகச்சேரியில் வீட்டில் கத்திமுனையில் கொள்ளை

சாவகச்சேரி கச்சாய் வீதியில் உள்ள வீடு ஒன்றுக்கு நேற்றுமுன்தினம் இரவு இரண்டு மணியளவில் கத்தியுடன் நுழைந்த இருவர் வீட்டில் உள்ளவர்களை எழுப்பி கத்தி, வாள்களைக்காட்டி,மிரட்டி கதிரைகளில் இருக்க வைத்துவிட்டு வீட்டில் இருந்த நகை பணம் என்பவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இப்பகுதியில் உள்ள சங்கக்கடையொன்றில் இரவு நேரக் காவலாளியாகப் பணியாற்றும் ஒருவரை கத்தி முனையில்கொள்ளையர்கள் கூட்டி வந்தே அக்காவலாளியின் சகோதரி வீட்டில் இக்கொள்ளை யினை மேற்கொண்டுள்ளனர்.

இதே பகுதியில் தொடர்ச்சியாக பல கொள்ளைச் சம்ப வங்கள் இடம்பெற்று வருவதாகவும் கடந்த ஒரு மாதத்தில் மட்டும் இப்பகுதியில் நான்கு வீடுகளில் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (28)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

வேலுப்பிள்ளை அம்பலவாணர் என்பவரது தேசிய அடையாள அட்டை, கைப்பை என்பன கோவிந்தன் கடைச்சந்திக்கும் திருவையாறு 2 ஆம் பகுதிக்கும் இடையில் 10.10.2005 இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்கப்படுகிறன. (6855)

### இறப்பர் முத்திரை

பொலிமர் இறப்பர் முத்திரை உடன் செய்து பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம் வாணி புத்தகசாலை (பிக்பென்ஸ்). கனகபுரம் டிப்போ வீதி,கிளிநொச்சி. (சி.13022)

### 10 நிமிடத்தில் படங்கள்!!!

அவசர தேவைக்கான பாஸ் மற்றும் சகல அடையாள அட்டைப் படங்களையும் உடன் வழங்குகின்றோம். டிஜிற்றல் அல்பம்,டியுறோ பிறேம், சகல லமினேசன் வேலைகளுக்கும்!!! (காலை 7.30 மணி தொடக்கம் எமது சேவையினைப் பெற்றுக்கொள்ளுங்கள்)யாழ்ஒளி K.S.R. PHOTOES) இல.05 கனகபுரம் தெரு, கிளிநொச்சி, (பேருந்து நிலையம் ,சந்தை அருகாமை). (649)

### விற்பனைக்குண்டு

லைட் இன்ஜின் ஒரிஜினல் ஜப்பான் 2700 K.V. மண்ணெண்ணையில் இயங்கக் கூடியதும், மற்றும் மோட்டார் சைக்கிள் (YAMAHA V50) ஒன்றும் விற்பனைக்குண்டு. தொடர்புககு த.யோகேஸ், 154 ஆம் கட்டை, செல்வபுரம், முறிகண்டி (சேச்சடி) 6850)

# கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற மேஜர் முரளி முன்பள்ளி சிறார்களின்கலை விழா

(அலுவலக செய்தியாளர்)

மேஜர் முரளி முன்பள்ளி சிறார்களின் கலைவிழா நேற்று கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் பரஞ்சோதி ஆசிரியரின் தலைமையில் இடம்பெற்றது.


தமிழீழ மாணவர் அமைப்பின் அனுசரணையுடன் கிளி. பண்பாட்டு மண்டபத்தில் நேற்று பி.ப. 2.00 மணியளவில் ஆரம்பமான மேற்படி நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக பொதுச் சுடர் ஏற்றப்பட்டது. பொதுச் சுடரினைத் தொடர்ந்து தமிழீழ தேசியக்கொடி ஏற்றப்பட்டது. தேசியக்கொடியினை காந்தரூபன் செஞ்சோலைப் பொறுப்பாளர் ஜனனி ஏற்றிவைத்தார். தொடர்ந்து முன்பள்ளி மேம்பாட்டுக் கொடி, தமிழர் புனர்வாழ்வுக் கழகக்கொடி என்பன ஏற்றப்பட்டது.

ஆரம்ப நிகழ்வுகளைத் தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் இடம் பெற்றன. அரங்க நிகழ்வின் முதல் நிகழ்வாக முன்பள்ளி மாணவர்களால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து சிறார்களின் அறிமுக நிகழ்வு இடம்பெற்றது.

அறிமுக நிகழ்வுகளைத் தொடர்ந்து மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. இதனையடுத்து ஆசியுரை, விருந்தினர் உரை என்பன இடம்பெற்றன.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினர்களாக அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் கிளி. மாவட்ட கல்விப்பணிப்பாளர் குருகுலராஜா, ஆகி யோர் கலந்து கொண்டனர்., மற்றும் பெற்றோர், நலன் விரும்பிகள், மாணவர்கள், போராளிகள் எனப் பலரும் கலந்து கொண்டு நிகழ்வினைச் சிறப்பித்தனர். (தீ. லோ)




# காலங்கடந்த பிறப்பு இறப்பு பதிவு தொடர்பான நடமாடும் சேவை

காலங்கடந்த பிறப்பு இறப்புக்களைப் பதிவு செய்வதற்கான நடமாடும் சேவை எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை அன்று பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது. இதுவரை பிறப்பு இறப்புக்களை பதிவு செய்யத் தவறியோர் இச்சேவையில் பங்குபற்றி பதிவுகளை மேற்கொள்ளுமாறு பச்சிலைப்பள்ளி உதவி பிரதேசச்செயலர் கேட்டுள்ளார். மேலும் இவ் நடமாடும் சேவையே இறுதிச் சந்தர்ப்பம் என்றும் அவர் கூறியுள்ளார்.

# த.பு. கழகத்தால் அமைக்கப்பட்ட இரு முன்பள்ளிகள் மன்னார் ஆயரால் திறந்து வைப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டதமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் டெனிஸ் அகதிகள் பேரவையின் (D.R.C)நிதியுதவியுடன் மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் நெடுங்கண்டல், அடம்பன் ஆகிய கிராமங்களில் நேற்று இரண்டு முன்பள்ளிகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

அடம்பன் முன்பள்ளி காலை 11.00 மணிக்கும் நெடுங்கண்டல் முன்பள்ளி நண்பகல் 12.00 மணிக்குமாக திறந்து வைக்கப்பட்டுள்ளன. இரண்டு முன்பள்ளிகளையும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மன்னார் மறைமாவட்ட ஆயர் அதிவணக்கத்துக்குரிய இராயப்பு யோசப் ஆண்டகை அவர்கள் நாடாவை வெட்டி திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார்.

அடம்பன் சென் மேரிஸ் முன்பள்ளி நிகழ்வில் பொதுச்சுடரை மாவீரர் மேஜர் கீச்சானின் தாயாரும் தமிழீழ தேசியக்கொடியினை மன்னார் மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் நிலவரசி, தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடியினை மன்னார் மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் அ. கேசவன் முன்பள்ளிக் கொடியினை முன்பள்ளி ஆசிரியை ஆகியோர் ஏற்றினர். நெடுங்கண்டல் அந்தோனியார் முன்பள்ளி நிகழ்வில் சிறார்கள் பிரமுகர்களை மலர்மாலை அணிவித்து வரவேற்றதைத் தொடர்ந்து பொதுச் சுடரை மாவீரர் கப்டன் ஆனந்தியின் தயாார் ஏற்றி வைக்க தமிழீழ தேசியக் கொடியினைஅடம்பன் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் றொபட் தமிழர் புனர்வாழ்வுக் கழக கொடியினை பொறியியலாளர் த. காண்டீபன், முன்பள்ளிக் கொடியினை முன்பள்ளி ஆசிரியை ஆகியோர் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து வரவேற்புரை, தலைமையுரை என்பவற்றுடன் சிறார்களின் பாடல், நடனங்களும் இடம்பெற்றன. அடுத்து பணிப்பாளர் அ.கேசவன், அரசியல்துறைப் பொறுப்பாளர் றொபட்,அடம்பன் மத்திய மகாவித்தியாலய அதிபர் கிறிஸ்ரியான், அடம்பன் பங்குத்தந்தை வணபிதா. இராசநாயகம் அடிகளார் ஆகியோரின் கருத்துரைகளும் இடம்பெற்றது.

# சிறுகைப்பணிப் பயிற்சி நிலையத் திறப்புவிழா

டனிடா மற்றும் ILO நிறுவனங்களின் நான்கு லட்சத்து 60 ஆயிரம் நிதியுதவியுடன் கிளிநொச்சி மாவட்ட பொருண்மிய மதியுரையகத்தால் பளைப் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள மாசார் கிராமத்தில் பனைசார் கைப்பணிப்பயிற்சி நிலையம் கடந்த வெள்ளிக்கிழமை அன்று காலை 10. 30 மணிளவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அப்பிரதேசத்தில் செறிந்து காணப்படும் பனைவளத்தைப் பயன்படுத்துவதன் மூலம் இக்கிராம மக்களின் பொருளாதார வளத்தினை மேம்படுத்தி வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கு இச்சிறு கைத்தொழில் உதவியாக இருப்பதைக் கருத்திற் கொண்டே இப்பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. இப்பயிற்சி நிலையத்தில் 40 பயனாளிகள் பயிற்சி பெற்று வருகின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. இக் கைத்தொழில் பயிற்சி மூலம் பெறப்படுகின்ற உற்பத்திப் பொருட்களை பனை அபிவிருத்தி சபையும், பொருண்மிய மதியுரையகமும் ஏற்றுமதி செய்ய உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# “பசுந்தேசம்” பாடல் ஒலிப்பேழை வரும் 19 ஆம் திகதி வெளியீட்டுவிழா

(அலுவலக செய்தியாளர்)

சிறீகுகனின் இசையில் தமி ழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் உருவாக்கிய “ பசுந் தேசம்” பாடல் ஒலிப்பேழை வெளியீட்டு விழா எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு மன்னார் ஆண்டான் குளம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

மேற்படி பாடல் ஒலிப்பேழை வெளியீட்டு வைபவத்தில் அனைவரையும் கலந்து நிகழ்வினைச் சிறப்பிக்கும் வண்ணம் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் வேண்டியுள்ளனர். (சோ)




## துயர் பகிர்கின்றோம்

பிறப்பு 10 – 03 – 1952



இறப்பு 16 – 10 – 2005

அமரர்

### திருமதி தங்கராசா சிவபாக்கியம்

கிளி. ப. தெ.வள, அபி.கூ. சங்கத்தின் பணியா ளர் திரு. உதயகுமார் அவர்களின் அன்புத் தாயார் 16.10.2005 இல் காலமாகிய செய்திகேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். இவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

தலைவர், பொதுமுகாமையாளர்,
பணிப்பாளர்கள், அங்கத்தவர்கள்,
பணியாளர்கள்,
கிளிநொச்சி ப. தெ.வ. அபி.கூ. சங்கம்
கிளிநொச்சி.

(சி.13040)

# மாகாண மட்ட ஆங்கிலதினப் போட்டியில் கிளி. புனித திரேசா பெண்கள் கல்லூரி 3 ஆம் இடம்

2005 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட மாகாணமட்ட ஆங்கில தினப்போட்டியில் கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரி மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது.மேற்படி ஆங்கிலதினப் போட்டியில் ஆரம்ப பிரிவு ஆங்கில நாடகப் போட்டியிலே மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது.

அத்துடன் 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாணமட்ட ஆங்கிலப் போட்டியிலும் அதே பாடசாலையைச் சேர்ந்த வெள்ளைச்சாமி றோஜினி என்ற மாணவி ஆங்கில சொல்வதெழுதல் போட்டியில் இரண்டாம் இத்தினைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (கு.தீ)

## கண்டெடுப்பு

(விசுவமடு)

தருமபுரத்திற்கும் நெத்தலி ஆற்று பாலத்துக்கு மிடையில் படகு ஓட்டும் பாய்சுருள் ஒன்று அண்மையில் கண்டெடுக்கப்பட்டு விசுவமடு அரசியல் துறையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரத்துடன் வந்து அரசியல்துறையில் பெற்றுகொள்ளுமாறு விசுவமடு அரசியல்துறை பணிமனை யினர் தெரிவித்துள்ளனர். (46)


ஒக்ரோபர் வாசிப்பு மாதம்
புதிய கற்றல் கற்பித்தல் பண்புகளின் விருத்தி..
வாசியுங்கள்
வருடாந்தச்சந்தா ரூ.300 மட்டுமே
தொடர்புகளுக்கு AHAVILI,3,Torrlngton Vvenue,colombo-7,Srilanka,
TEL:011-2506272 E-MAIL:ahavili @ Viluthu.org
அகவிழி
ஆசிரியத்துவ நோக்கு

# ஈராக்கிற்குப் பின் பாகிஸ்தானை தாக்கவும் புஷ் திட்டமிட்டிருந்தார்

## அமெரிக்க பத்திரிகை பரபரப்புத் தகவல்

(நியூயோர்க்)

**ஈராக் நாட்டுக்கு பின்னர் பாகிஸ்தானைத் தாக்கவும் அமெரிக்க சனாதிபதி புஷ் திட்டமிட்டிருந்தார் என்ற பரபரப்புத் தகவலை அமெரிக்க பத்திரிகை வெளியிட்டு இருக்கிறது.**




கடந்த 2003 ஆம் ஆண்டு சனவரி 30 ஆம் திகதி அமெரிக்க சனாதிபதி புஷ் இங்கிலாந்துப் பிரதமர் டொனி பிளேயருடன் தொலைபேசியில் பேசினார்.

அப்போது சவுதி அரேபியா, ஈரான், தென்கொரியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் அணுவாயுதங்களைச் சேகரித்து வருகிறன. அணுவாயுதப் பரவலைத் தடுக்க வேண்டும் ஈராக்கில் அணுவாயுத சோதனை நடத்தி வரும் அதிகாரிகளுடன் தற்போது சதாம் ஹூசைன் ஒத்துழைக்கிறார். என்று தகவல் வந்துள்ளது. ஈராக் போருடன் நிறுத்தக்கூடாது அதன் மேலேயும், செல்ல வேண்டும் பாகிஸ்தானையும், தாக்க வேண்டும் அப்போது தான் அணுவாயுதப் பரவலைத் தடுக்க முடியும் என்றும் குறிப்பிட்டார் புஷ்.

பாகிஸ்தான் அணுவாயுதங்களை உற்பத்தி செய்வதைத் தடுக்க வேண்டும். அது ஒரு பிரச்சினைக்குரிய நாடு என்றும் புஷ் டொனி பிளேயரிடம் கூறினார்.


இந்தத் தகவலை அப்போதைய டொனி பிளேயளர் நேர்முக உதவியாளர் மத்யூ அவர் எழுதியுள்ள ஒரு புத்தகத்தில் தெரிவித்திருக்கிறார். இது பற்றிய செய்தியை நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை செய்தியாக வெளியிட்டு இருக்கிறது. இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

இது பற்றி வோஷிங்டனில் இருக்கும் இங்கிலாந்து தூதரக அதிகாரிகள் கருத்துத் தெரிவிக்க மறுத்து விட்டனர். அமெரிக்க சனாதிபதி மாளிகை அதிகாரிகளும் எதுவும் கூறவில்லை.





**பாகிஸ்தானில் பூகம்பத்தால் காயமடைந்த மக்களுக்குத் தேவையான இரத்தம் வழங்கும் நிகழ்வில் பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பின் மனைவி ஷேபாவும் இரத்ததானம் செய்வதை முதலாம் படத்திலும் பாகிஸ்தான் அதிபர் முஷாரப் பூகம்பத்தால் இறந்து போன மக்களுக்காக பிரார்த்தனை செய்வதை இரண்டாவது படத்திலும், காணலாம்.**



**தேர்தலில் வாக்களித்த ஈராக்கியப் பொலிசார் ஒருவர் தான் வாக்களித்ததை வெளிப்படுத்த விரலில் பூசிய மையைக் காண்பிக்கிறார்.**

# பாக்.இற்கு இஸ்ரேல் ஐ.நா சபை ஊடாக உதவி

பாக்.இற்கு பூகம்ப நிவாரண உதவி வழங்க இஸ்ரேல் முன்வந்துள்ளது. இதனை ஏற்றுக்கொள்ள பாகிஸ்தான் சம்மதம் தெரிவித்தது. பலஸ்தீன பிரச்சினை காரணமாக பாகிஸ்தான் - இஸ்ரேல் இடையே தூதரக உறவு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் ஐ.நா.சபை மூலமாக இஸ்ரேல் உதவியை வழங்க இருக்கிறது.

பாகிஸ்தானில் சமீபத்தில் ஏற்பட்ட நில நடுக்கத்தில் பல்லாயிரக்கணக்கானவர்கள் பலியானார்கள். மீட்பு மற்றும் நிவாரணப்பணிகளுக்காக உலக நாடுகள் உதவிக்கரம் நீட்டியுள்ளது. அமெரிக்கா இராணுவ உலங்குவானூர்திகள் மற்றும் சாதனங்களை அனுப்பியுள்ளது.

இந்த நிலையில் வோஷிங்டனிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்துக்கு அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ் சென்று அங்கு வைக்கப்பட்டுள்ள புத்தகத்தில் தனது அனுதாபச் செய்தியைப் பதிவு செய்தார். "பூகம்பத்தில் உயிரிழந்தவர்களுக்காக அமெரிக்க மக்கள் பிரார்த்திக்கிறார்கள். அவர்களுக்கு அமெரிக்கா சார்பில் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். பாதிக்கப்பட்ட மக்களுக்கு எத்தகைய உதவிகள் தேவைப்படுகிறதோ அதனை வழங்கத் தயாராக இருக்கிறோம்" என்று அதில் ஜோர்ஜ் புஷ் குறிப்பிட்டுள்ளார்.

# நெதர்லாந்து பிரதமரைக் கொல்ல தீவிரவாதிகள் முயற்சி

நெதர்லாந்தில் தீவிரவாதிகள் வெடிகுண்டுகளை வைத்து அந்நாட்டுப் பிரதமரை கொலை செய்ய முயன்றுள்ளனர். இதைத் தொடர்ந்து சந்தேகத்தின்பேரில் ஏழுபேர் கைது செய்யப்பட்டுள்ளனர். தீவிரவாதிகளின் சதித்திட்டம் தொடர்பாக தெரியவருவதாவது, நேற்று முன்தினம் நெதர்லாந்தின் பாராளுமன்றம், விமான நிலையம், பாடசாலை அணுசக்தி நிலையம் ஆகியவை மீது வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தி அக்கட்டங்களைத் தகர்க்கவும் தீவிரவாதிகள் திட்டமிட்டிருந்தனர். பிரதமர் ஜோன் பீற்றரின் வீடு மற்றும் அலுவலகம் மீது ஒரு நேரத்தில் தாக்குதல் நடத்தி அவரைக் கொல்லவும் திட்டமிட்டு இருந்தனர். இவ்வாறு ஒரே நேரத்தில் பல்வேறு நகரங்களில் தீவிரவாதிகள் தாக்குதுல்ட நடத்தத் திட்டமிமட்டிருந்தது குறித்து உளவுத்துறைக்கு தகவல் கிடைத்தது.

இதைத்தொடர்ந்து பாராளுமன்றத்தின் அன்றைய கூட்டம் இரத்துச் செய்யப்பட்டது. முக்கிய இடங்களில் பொலிசார் பாதுகாப்புக்குக் குவிக்கப்பட்டனர். பிரதமர் அலுவலகமும் மூடப்பட்டது.

பல்வேறு நகரங்களில் பொலிசார் அதிரடிச் சோதனை நடத்தினார்கள். இதில் ஏழு தீவிரவாதிகள் பிடிபட்டனர். பாராளுமன்ற கட்டடத்தை தகர்க்கும் சதித் திட்டமும் பிரதமரை கொல்லும் முயற்சியும் இதன் மூலம் முறியடிக்கப்பட்டது பிடிபட்ட ஏழு பேரில் ஒருவர் பெண் ஆவார்.



**பூமியதிர்வினால் பாதிக்கப்பட்ட பிரதேசமான இந்திய காஷமீர் பகுதியில் நிவாரணப் பொருட்களின் வரவை எதிர்பார்த்து நிற்கும் சிறுவன்.**

# பாக்.இல் புவி அதிர்வில் பாதிக்கப்பட்டோருக்கு உதவும் பணியில் ஈடுபட்ட உலங்குவானூர்தி விபத்தில்

## -ஆறு படையினர் பலி

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் நேற்று முன்தினம் மாலை ஏற்பட்ட உலங்கு வானூர்தி விபத்தில் ஆறு படை வீரர்கள் பலியாகினர்.

அண்மைய புவியதிர்வால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியளிக்கும் பணிகளில் ஈடுபட்ட பின்னர் தளத்திற்கு திரும்பிக் கொண்டிருந்த எம் ஐ 17 ரக உலங்குவானூர்தியே விபத்துக்குள்ளாகியுள்ளது.

எனினும் இதுவரை விபத்துக்கான காரணம் கண்டறியப்படவில்லை.

இதேவேளை புவியதிர்வால் பாதிக்கப்பட்ட பாகிஸ்தான் பிரதேசங்களில் தற்சமயம் அதிக குளிர் காலநிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதன் காரண மாக மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# அமெ.வடகிழக்குப் பகுதியில் கன மழை நியூயோர்க், நியூஜெர்சியில் வெள்ள அபாயம்

(நியூயோர்க்)

அமெரிக்காவில் வடகிழக்குப் பகுதியில் கடந்த சில தினங்களாக கனமழை பெய்து வருகிறது. நியூயோர்க், நியூஜெர்சி, லிட்டில் பால்ஸ் ஆகிய நகரங்களில் மழை காரணமாக வீதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான பகுதியில் உள்ள ஆயிரக் கணக்கான வீடுகளை மழை நீர் சூழ்ந்துள்ளது.

இந்த நிலையில் அப் பகுதியில் உள்ள ஆறுகளில் அபாய எல்லையைத் தாண்டி தண்ணீர் ஓடுகிறது. பல இடங்களில் உடைப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் வெள்ள எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தாழ்வான பகுதிகளில் குடியிருப்பவர்கள் வெளியேறும் படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

# தைவானில் கடலுக்கு அடியில் ஏழு ரிச்டர் அளவில் நிலநடுக்கம்

(தைபே)

தைவான் நாட்டில் நேற்று முன்தினம் இரவு திடீரென்று நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நில நடுக்கம் அதிக சக்தி வாய்ந்தது. ரிச்டர் அளவில் ஏழு புள்ளிகளாகப் பதிவானது.

ஆனாலும், இந்த நிலநடுக்கம் அதிக அளவில் சேதத்தை ஏற்படுத்தவில்லை. உயிர்ச் சேதமும் ஏற்படவில்லை.

தைவானின் கிழக்குக் கடல் பகுதியில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் கடலுக்கு அடியில் 180 கிலோமீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்தது. இதனால் நிலப் பகுதியில் சேதம் ஏற்படவில்லை.

ஆனாலும், தைபே நகரம் உட்பட சில இடங்களில் கட்டடங்கள் அதிர்ந்தன. மக்கள் பீதியில் அங்குமிங்கும் ஓடினார்கள். கடலுக்கு அடியில் நிலநடுக்கம் ஏற்பட்டதால் சுனாமி பேரலைகள் தாக்கக்கூடும் என்ற அச்சத்தில் கடலோரப் பகுதியில் உள்ளவர்கள் பாதுகாப்பான இடம் தேடிச் சென்று விட்டனர்.

தைவானில் கடந்த 1999 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஏற்பட்ட பூகம்பத்தால் 2400 பேர் பலியானார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அப்போது ஏற்பட்ட பூகம்பம் 7.6 ரிச்டர் அளவில் பதிவானது.

# துருக்கியில் பறவைக் காய்ச்சல் நோய் குறித்து மக்கள் பெரும் அச்சம்!

(இஸ்தான்புல்)

துருக்கி நாட்டில் பறவைக் காய்ச்சல் நோய் பரவும் ஆபத்துக்கு குறித்து மக்கள் அச்சமடைந்துள்ளனர். இதை யொட்டி அங்கு ஏராளமான கோழிகளும், வான் கோழிகளும் அழிக்கப்பட்டன.

மக்கள், கோழிஇறைச்சியை வாங்குவது இல்லையே என்று இறைச்சிக் கடைக்காரர்கள் வேதனைப்பட்டனர்.

மக்களுக்கு ஏற்பட்டுள்ள பீதியைப் போக்க துருக்கிப் பிரதமர் தயீப் எர்டோகான்,ரம்ஜான் நோன்பு திறக்கும் போது கோழிக் கறி சாப்பிட்டார். இந்த நிகழ்ச்சி தொலைக்காட்சியிலும், காண்பிக்கப்பட்டது. ஆனால் அதன் பிறகும் மக்களின் பீதி குறையவில்லை என்று இறைச்சிக் கடைக்காரர்கள் கூறினார்கள்.

# புலிகளின் இராணுவ பலம் அரசியல் பலமாவதை விரும்பாத சக்திகளே சதிமுயற்சிகளில் ஈடுபட்டுள்ளன

## கூட்டமைப்புப் பாராளுமன்றக் குழுத்தலைவர் இரா. சம்பந்தன்



(திருகோணமலை)

''விடுதலைப் புலிகளின் இராணுவப் பலத்தினால் உருவான யுத்தநிறுத்தம், தமிழ்பேசும் மக்களை அரசியல் பலம் பெற்றவர் களாக மாற்றும் நிலையை நாட்டில் இன்னும் ஏற்படுத்தவில்லை. விடுதலைப் புலிகளின் இராணுவ பலம் தமிழ் பேசும் மக்களின் அரசியல் பலமாக மாறுவதை விரும்'பாத சக்திகள், சதிமுயற்சி வேலைகளில் ஈடுபட்டுள் ளன''இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுவின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

சனிக்கிழமை மாலை திருகோணமலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தில் தமிழ் தேசிய எழுச்சிநாள் விழிப்புணர்வுக் கருத்தரங்கில் பங்குபற்றிப் பேசும் போது குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகளின் இராணுவ பலம், தமிழ்பேசும் மக்களை அரசியல் பலம்பெற்றவர்களாக மாற்ற வேண்டும். அவ்வாறு மாற்றப்படுவதை உடைப்பதற்குத் தான் அரசாங்கமும் அதன் ஆயுதபடையினரும் துணைப்படையினரின் துணையுடன் பல சூழ்ச்சிகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர்.

திருகோணமலையை இழப்பதற்கு எவரும் தயாராக இல்லை. திருகோணமலையில் உரித்துள்ளவர்களும் தயாரில்லை. உரித்தில்லாதவர்களும் தயாரில்லை. வடக்குக் கிழக்குமாகாணம் போதிய சுயாட்சி அதிகாரங்கள்கொண்ட மாநிலமாக அமைய வேண்டும் என்பதே தமிழ் பேசும் மக்களின் குறைந்தபட்ச அபிலாசையாகும். அவ்வாறான இறுதித்தீர்வு, திருகோணம லையை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். திருகோண மலை, வடக்குக் கிழக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங் களைப்போன்றதல்ல. திருகோணமலை மாவட்டம் தனித்துவ மானது. எனவே திருகோணமலையில் நடக்கப்போகும் தமிழ் தேசிய எழுச்சிநாள் நிகழ்வு தமிழ் பேசும் மக்களின் கணிசமான ஆதரவைப் பெற்றதாக அமைய வேணடும்.

"திருகோணமலையில் தமிழ்தேசிய எழுச்சிநாள் நிகழ்வை நடத்துவதற்கு முட்டுக்கட்டை இருக்காது என்று நான்சொல்ல வில்லை. நாம் எவருக்கும் மாறாக எழுச்சிநாள் நிகழ்வை நடத்தவில்லை. எங்கள் உரிமைகளை வலியுறுத்துவதற்கே இந்நிகழ்வை நடத்துகின்றோம். யுத்த நிறுத்தம் நடைமுறைக்கு வந்து மூன்றரை ஆண்டுகள் கடந்துவிட்டன. தமிழ் பேசும் மக்களின் அரசியல் நிலவரத்தில், அவர்கள் தங்களின் உரிமைகளைப் பெறுவதில் தற்காலிகமாகக் கூட மாற்றம் ஏதும் ஏற்படவில்லை. இந்த நிலை இனியும் தொடர முடியாது என்பதை வலியுறுத்துவதே எழுச்சிநாள் நிகழ்வின் நோக்கம்"

" யுத்தம் சமாதானத்துக்கு தடையானது. சமாதானப் பேச்சு வார்த்தை நடத்தி தமிழ்தேசியப் பிரச்சினைக்குத் தீவுகாணவே யுத்தநிறுத்தம் கொண்டு வரப்பட்டது. ஆனால் யுத்தநிறுத்தம் வந்த பின்னர் தமிழ் பேசும் மக்கள் ஒன்றையும் அடைய வில்லை. இடைக்காலத்தன்னாட்சி அதிகாரசபை மற்றும் கடற்கோள் நிவாரணப் பொதுக்கட்டமைப்பு என ஒன்றுமே கிடைக்கவில்லை" என அவர் தெரிவித்தார். (25)

# இனியவாழ்வு இல்லத்தில் வெண்பிரம்பு தினம்

(அலுவலக செய்தியாளர்)

இனிய வாழ்வு இல்லத்தினால் வெண்பிரம்பு தினம் எதிர்வரும் 19ஆம் திகதியன்று கொண்டாடப்படவுள்ளது.

அன்றைய தினம் பிற்பகல் 3.30 மணிக்கு புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் இனியவாழ்வு இல்ல நிர்வாகத்தினர் வேண்டியுள்ளனர். (சோ)

# சுழிக்காற்றினால் பாதிப்புற்ற குடும்பங்களுக்கு உதவி

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி சாந்தபுரம் கிராமத்தில் கடந்தவாரம் ஏற்பட்ட சுழிக்காற்றினால் பாதிக்கப் பட்ட குடும்பங்களுக்கு வீடு வேய்வதற்கான கிடுகுகளும் அதற்குத் தேவையான பொருட் களும் சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தில் வைத்து வழங்கப்பட்டது.



கடந்த வெள்ளிக்கிழமை யன்று பிற்பகல் 2.00 மணிக்கு கிளி கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தலைவர் கண்ணன் தலைமையில் நடைபெற்ற மேறபடி நிகழ்வில் கிளி. கிழக்கு புனர்வாழ்வு நிறுவன உதவிப்பணிப்பாளர் இ.நவநீதன், கலைமகள் வித்தியாலய முதல்வர் ஆலாலசுந்தரம், ஊரக வளர்ச்சியை சார்ந்த ஈழவன் மற்றும் நிறுவன பிரமுகர்கள் கலந்து கொண்டு பாதிக்கப்பட்ட 25 குடும்பங்களுக்கு மேற்படி பொருடகளை கையளித்து வைத்தனர்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் நிதியுதவியுடன் கிளி கிழக்கு தமிழர் புனர்வாழ்வு நிறுவனத்தின் அனுசரணையுடன் மேற்படி கிடுகும் பொருட்களும் வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

(சோ)

# முல்லையில் தூய்மை பேணும் பணியில் பொது அமைப்புக்கள், போராளிகள்!

(முல்லைத்தீவு)

தாயகச்சூழலில் தூய்மை பேணுதலும் ஆரோக்கியமான நல்வாழ்வினை மேம்படுத்தலும் என்ற நோக்குடன் கடந்த செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவில் நடைபெற்ற கலந்துரையாடலின் தீர்மானத்திற்கு அமைவாக கடந்த வெள்ளிக்கிழமை கிராமங்கள்தோறும் துப்புரவுப்பணி இடம் பெற்றது.

வட்டுவாகல் கிராமப் பகுதியை தமிழீழ நிர்வாக சேவையினரும் செல்வபுரம் கிராமப் பகுதியை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினரும் முல்லை மக்கள் நலன்புரிச்சங்கத்தினரும் இணைந்து கோவில்க்குடியிருப்பு கிராமத்தையும் கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கம் மணற்குடி கிராமத்தினையும் வண்ணாங்குளம் கிராமத்தை கூட்டுறவுச்சங்க சமாசமும் வர்த்தக சங்கமும் முல்லைத்தீவு வைத்தியசாலையையும் அதனை அண்டிய பகுதியையும் முல்லைத்தீவு மகாவித்தியாலயமும் றோ.க. பாடசாலையும் இணைந்து மேற்கொண்டன. மேலும் சந்தையையும் அதனை அண்டிய பகுதிகளிலும் கடற்புலிகளின் அரசியல் துறையினரும் சந்தைநிர்வாகத்தினரும் இணைந்து துப்புரவுப் பணியில் ஈடு பட்டனர்.

கழிவுகளாக அகற்றப்பட்ட பழைய பொருட்கள், ஏனைய குப்பைகள், சுனாமியின்போது தேங்கிய கழிவுப் பொருட்கள் என்பன இதன்போது கரைதுறைப்பற்று பிரதேச சபையின் உதவியுடன் அகற்றப்பட்டன.

– அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலயத்தில் –

# பாடசாலை மட்ட கணிப்பீட்டு வேலைத்திட்ட தினம் அனுஷ்டிப்பு

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலயத்தில் பாடசாலை மட்ட கணிப்பீட்டு வேலைத்திட்ட தினம் கடந்த வெள்ளிக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

எல்.எப்.வித்தியாலய அதிபர் திருமதி நடேசமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாடசாலை மட்ட கணிப்பீட்டு வேலைத்திட்டம் தொடர்பாக ஆசிரியர்களான சண்முகரத்தினம், திருமதி வசந்தகுமார் ஆகியோர் விளக்கமளித்தனர்.

பாடசாலை மட்டகணிப்பீட்டு வேலைத் திட்டம் தொடர்பாக பாடசாலை மாணவ, மாணவிகளினதும், பெற்றோர்களினதும் அறிவு, விளக்கம் என்பவற்றை விரிவுபடுத்துவதற்காக கல்வி அமைச்சுடன் இணைந்து இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட இப்பாடசாலை மட்ட கணிப்பீட்டு வேலைத்திட்ட தின நிகழ்வில் வவுனியா தெற்கு கல்வி வலய ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி. தேவசேனா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும், பெற்றோர்களும் கலந்துகொண்டனர். (10)

# பெண்களின் மேம்பாடுகள் தொடர்பாக கிராம அமைப்புகளுடன் கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

வவுனியா வடக்கு பிரதேசத்தில் பிரதேச ரீதியாக நெடுங்கேணி, சின்னடம்பன், சேமமடு, புளியங்குளம் ஆகிய கிராம மாதர் அபிவிருத்திச் சங்கங்களின் விசேட கலந்துரையாடல்கள் வவுனியா மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் ஆவர்த்தனா தலைமையில் கடந்த வெள்ளிக் கிழமை காலை ஒன்பது மணிக்கு நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி, மகளிர் அமைப்பின் முன்னேற்றமான செயற்பாடுகள் செயற்படவேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பாக சிறப்புரைகளை வழங்கினார். திட்டமிடல் செயலகத்தின் மகளிர் பொறுப்பாளர் மதி பெண்களின் அபிவிருத்தி தொடர்பாகவும் விளக்கமளித்தார்.

இக்கலந்துரையாடலில் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானம், தூயவன் அரசறிவியல் கல்லூரி அதிபர் அரசண்ணா, வன்னி பாராளுமன்ற உறுப்பினர் வினோ ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

மாவட்ட பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனப் பணிப்பாளர், இணைப்பாளர்கள், பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றல்


(வடமராட்சி கிழக்கு)


பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினரும் பொதுசுகாதார பிரிவினரும் இணைந்து பெரியபளை, தம்பகாமம், புலோப்பளை கிழக்குபோன்ற கிராமங்களில் வளர்ப்பு நாய்களுக்கு கடந்த பத்தாம் திகதி தடுப்பூசி ஏற்றினர். ஏனைய கிராமங்களிலும் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்படும் என்று பச்சிலைப்பள்ளி பிரதேச பொது சுகாதார பிரிவினர் தெரிவித்தனர். (11)

# கிளிநொச்சி ம.வி. மாணவர்களின் முத்தமிழ் அரங்க நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவர்களின் முத்தமிழ்அரங்க நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது. காலை 9.00 மணியளவில் தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமான நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். காலையில் இருந்து இரவுவரை மூன்று காட்சிகளாக மேற்படி முத்தமிழ்அரங்கு நடைபெற்றது. தேசிய ரீதியில் பங்குகொள்ள தெரிவான நாடகத்துடன்,நாட்டிய நாடகம், இன்னிசைக் கச்சேரி, சிறுவர் நடனம், ஆங்கிலப் பாடல்கள், தனி நடனம் என தனித்தனியான காட்சிகள் மிகச் சிறப்பான முறையில் அரங்கேற்றப்பட்டன. மேற்படி மூன்று நேர காட்சிகளிலும் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள், அரச அரசசார்பற்ற உத்தியோகத்தர்கள், கல்விச்சமூகத்தின் ,நலன விரும்பிகள் எனப்பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.(கு.தீ)





# முல்லை. வர்த்தகர்களுக்கு வேள்ட் விஷன் உதவி

(முல்லை)

சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு நகர வர்த்தகர்களுக்கு வேள்ட்விஷன் அமைப்பு பொருட்கள் சிலவற்றை வழங்கியுள்ளது. நேற்று முன்தினம் காலை 9.30 மணிக்கு இந்நிகழ்வு இடம்பெற்றது.

மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து தமிழீழதேசியக் கொடியினை முல்லை.மாவட்ட கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் மா. ரங்கன் ஏற்றினார். தொடர்ந்து கருத்துரைகளை முன்னாள் கரைதுறைப்பற்று உதவி அரசாங்க அதிபர் காசிப்பிள்ளை, வேள்ட்விஷன் திட்ட முகாமையாளர் சிசிப் பெனாண்டோ, வன்னிப் பிராந்திய திட்ட முகாமையாளர் ஐங்கரன் ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

தொடர்ந்து 160 வர்த்தகர்களுக்கு ரூபா 10000 தொடக்கம் 38000ரூபா வரை பெறுமதியுடைய பொருட்கள் வருகைதந்த பிரமுகர்களால் வழங்கப்பட்டன. (20)

# இராணுவம் பொலிசாரின் கெடுபிடி யாழ்.இல் அதிகாரிப்பு

(யாழ்ப்பாணம்)

***யாழ்.குடாநாடெங்கும் பொலிசார் மற்றும் இராணுவத்தினரால் பொது மக்கள் மீது பலத்த கெடுபிடி, சோதனை நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளது.***

யாழ். குடாநாட்டில் சமாதான காலத்தில் என்றுமில்லாதவாறு பொலிசார் மற்றும் இராணுவத்தினரின் கெடுபிடி நடவடிக்கைகள் தற்போது அதிகரித்து இருப்பதுடன் வாகனச் சோதனைகளும் அதிகரித்துள்ளதாகத் தெரியவருகிறது.

இதனால் பொது மக்கள் மீது சோதனைக் கெடுபிடிகள் அதிகரித்துள்ளதோடு இளைஞர்கள் பலர் இராணுவத்தால் அச்சுறுத்தப்பட்டுள்ளனர் இதனால் பலர் பாதிக்கப்பட்டு வருவதுடன் வாகன ஆவணங்கள் தொடர்பான சிறுகுற்றங்களுக்கும் பெருந்தொகையான தண்டப்பணம் அறவிட்டு வருவதாகவும் மற்றும் சிறிலங்காப் பொலிசார் வாகனச் சாரதிகளிடமும் உந்துருளிகளில் பயணிப்போரிடமும் சிறுகுற்றங்களை காரணம் காட்டி இலஞ்சமாக பணம் பொருட்கள் பெறுவதாகவும் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (28)

# பண்ணைப் பால புனரமைப்புப் பணி நேற்று முன்தினம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பண்ணைப்பாலம் திருத்தும் பணிகள் இராணுவத்தினரின் கண்காணிப்புடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இப்பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தீவகத்தையும், யாழ்ப்பாணத்தையும் இணைக்கும் இப்பாலம் திருத்தும் பணிகள் இடம் பெறும்வேளை தீவக மக்கள் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள்.

பாலத்தின் இரு புறங்களில் இருந்தும் மக்களை ஏற்றி இறக்கும் முயற்சியில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் கடற்றொழிலாளர் சமாசத்தின் ஏற்பாட்டில் ஆறு படகுகள் சேவையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளன.

பொது மக்கள் ஏறி இறங்குவதற்கு வசதியான இடம் இல்லாமையால் பொது மக்கள் பொருட்களை இடம் மாற்றம் செய்வதிலும் சிரமங்கள் காணப்படுகின்றன.

உந்துருளி, ஈருருளி மற்றும் பொருட்களைக் கொண்டு செல்ல குறிப்பிட்ட பணம் கட்டணமாக அறவிடப்படுகின்றது. (28)

# ரணிலுடனான விவாதத்திற்கு மகிந்த ஒப்புக்கொள்ள வேண்டுமென்கிறார் ஜெயரட்ண

சிறிலங்க சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க விடுத்த அழைப்பை ஏற்று அவருடன் நேரடியாக சுதந்திரக்கட்சி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ விவாதம் நடத்த வேண்டுமென்று பிரதி அமைச்சர் டி.எம். ஜெயரட்ண வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக ஜெயரட்ண கூறியதாவது;

கனினி கொள்வனவு மோசடி தொடர்பாக .மகிந்த ராஜபக்ஷவுடன் தான் விவாதிக்கத் தயாராக இருப்பதாக ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் தெரிவித்திருந்தார். அமெரிக்கா மற்றும் வளர்ந்த நாடுகளில் இருப்பதைப் போன்று இரு வேட்பாளர்களும் நேரடி விவாதம் நடத்த வேண்டும். இது ஆரோக்கியமான அரசியலுக்கு வழிவகுக்கும் இதில் தவறு ஏதும் இல்லை. இரு முக்கிய வேட்பாளர்களும் தெரிவிக்கும் குற்றச்சாட்டுகளின் உண்மைத்தன்மையை மக்கள் புரிந்துகொள்ள முடியும்.

தற்போது இருவரும் குற்றம் சாட்டப்பட்டவர்களாக இருக்கிறார்கள். தங்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக மக்களுக்கு அவர்கள் விளக்கம் அளிக்க வேண்டும் என்றார் ஜெயரட்ண.

# நெல்லியடிப்பகுதியில் பொதுமக்களை அச்சுறுத்தும் இராணுவப் புலனாய்வுத்துறையினர்

(தென்மராட்சி)

நெல்லியடியில் இனந்தெரியாதோரின் தாக்குதலில் பொலிசார் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து நகரில் பதட்டம் ஏற்பட்டுள்ளது. பொலிசார் மற்றும் இராணுவப் புலனாய்வுத்துறையினரின் அச்சுறுத்தும் நடவடிக்கைகள் அதிகரித் துள்ளது.

நெல்லியடியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இனந்தெரியாதோரின் தாக்குதலில் பொலிசார் ஒருவர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து நகரில் பதட்டமானதொரு நிலை ஏற்பட்டு இருப்பதுடன் அதிகளவான படையினரும் பொலிசாரும் இப்பகுதிகளில் குவிக்கப்பட்டுள்ளனர். பொதுமக்களையும் வர்த்தகர்களையும் அச்சுறுத்தும் நடவடிக்கைகளில் இராணுவப் புலனாய்வுத் துறையினர் ஈடுபட்டு இருப்பதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். மற்றும் இப்பிரதேசத்தில் உள்ள இளைஞர்கள் சிலரும் படையினரால் அச்சுறுத்தப்பட்டு இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (28)

# கொள்ளுப்பிட்டியல் முஸ்லிம்களின் வணக்கஸ்தலமருகே அமைக்கப்பட்ட புத்தர் சிலைஉடன் அகற்றுக!

***-இனமோதலை உருவாக்கலாமென எச்சரிக்கிறார் அமைச்சர் பௌசி***

கொழும்பு கொள்ளுப்பிட்டியில் முஸ்லிம்களின் வணக்கஸ்தலம் அருகே திடீரென அமைக்கப் பட்டிருக்கும் புத்தர் சிலையை உடனே அகற்ற வேண்டுமென்று சிறிலங்காவின் அமைச்சர் ஏ.எச்.எம் பௌசி வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து ஏ.எச். எம் பௌசி கூறியுள்ளதாவது;

கொள்ளுப்பிட்டி முஸ்லிம்களின் வணக்க ஸ்தலத்திற்கு அருகில் 50 மீற்றரில் திடீரென புத்தர்சிலை வைக்கப்பட்டுள்ளது அது அப்பகுதியில் இனமோதல்களை ஏற்படுத்தக் கூடும்.

இது தொடர்பாக கொழும்பு மேயர் பிரச்சன குணவர்த்தனவிடம் தனிப்பட்ட முறையிலும் வேண்டுகோள் விடுத்திருந்தேன். ஆனால் அந்த புத்தர்சிலை அகற்றப்படவில்லை. இது விடயத்தில் முஸ்லிம் மக்கள் மிகவும் கோபத்தில் உள்ளனர் என்றார் அவர்.

கொள்ளுப்பிட்டி முஸ்லிம்கள் இது விடயத்தில் மிகவும் கவலை கொண்டுள்ளனர் முஸ்லிம்களின் வணக்க ஸ்தலத்தின் அறங்காவலரான எம்.ஜே.எம் முபாரக் இது குறித்து கூறுகையில்;

இந்த திடீர் புத்தர் சிலையை அகற்ற வலியுறுத்தி மூன்று வாரங்களுக்கு முன்பாக பிரதமர் இல்லம் நோக்கி கண்டனப் பேரணி நடாத்த திட்டமிட்டிருந்தோம் நாங்கள் அமைதி காத்து வருகின்றோம் மேயர் மற்றும் பிரதமரிடம் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தினோம் முஸ்லிம் கட்சிகள் மற்றும் முஸ்லிம் அமைச்சர்களிடம் இது தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளோம் தற்போது சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளோம் என்றார் அவர்.

# சிறீ.முஸ்லிம் காங்கிரசில் பைசால் முஸ்தபா இணைகிறார்?

சிறிலங்கா பிரதி அமைச்சரும் இலங்கை தோட்டத் தொழிலாளர் காங்கிரசின் துணைத்தலைவருமான பைசால் முஸ்தபா விரைவில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசில் இணையக்கூடும் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் முடிவு மேற்கொண்ட நிலையில் அக்கட்சியின் அமைச்சர்கள் இருவர் அரசாங்கத்திலிருந்து விலகினர். ஆனால் பைசால் முஸ்தபா பதவி விலக மறுத்து விட்டார்.

இந்த நிலையில் தற்போது தோட்டத்தொழிலாளர் காங்கிரசிலிருந்து விலகி முஸ்லிம் காங்கிரசில் இணையவுள்ளதாகவும் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் கண்டி மாவட்டத்தில் பைசால் முஸ்தபா போட்டியிட திட்டமிட்டுள்ளதாகவும் தெரிகிறது.

இது தொடர்பில் பைசால் முஸ்தபா உத்தியோகபூர்வ அறிவிப்பு எதனையும் வெளியிடவில்லை.

# மகிந்தவின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் அநுரா பாண்டாரநாயக்க உரை

சிறிலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவை ஆதரித்து கம்பஹாவில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் வெளிவிவகார அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க கலந்து கொண்டார்.

கம்பஹா கூட்டத்தில் பேசிய அநுரா கட்சிக்குள் வேறுபாடுகள் இருந்தாலும் நாங்கள் மகிந்தவை ஆதரிக்கிறோம் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கேட்டுக் கொண்டதையடுத்தே தமிழீழ விடுதலைப்புலிகளின் மீதான பயணத்தடையை ஐரோப்பிய ஒன்றியம் விதித்தது அதை வரவேற்கிறோம் என்றார்.

இக்கூட்டத்தில் ஜே.வி.பியின் விஜித ஹேரத் மற்றும் லால் காந்த ஆகியோரும் உரையாற்றினர்.

ஆனால் அந்தக் கூட்டத்துக்கு மகிந்த வருவதற்கு முன்னதாகவே அநுரா புறப்பட்டுச் சென்றுவிட்டார்.



மக்கள் விடுதலை முன்னணி தலைவர் சோமவன்ச அமரசிங்கவை நாட்டைவிட்டு வெளியேற்றுமாறு தேசப்பிரேமி தேசிய இயக்கம் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது, சோமவன்சவின் கொடும்பாவி எரிக்கப்பட்டதுடன், ஆர்ப்பாட்டக்காரர்கள் அதன்மீது எச்சிலும் உமிழ்ந்தனர். பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு திரட்டும் முகமாக கொழும்பில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் வைத்து சிறிலங்கா இராணுவத்தை கலைக்க வேண்டுமென சோமவன்ச வெளியிட்ட கருத்தை கண்டித்தும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் இந்த ஆர்ப்பாட்டம் கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக நடத்தப்பட்டமை தெரிந்ததே.

# சு.கட்சியினரை பழிவாங்[illegible]

சனாதிபதித் தேர்தல் நவம்பர் மாதம் 17 ஆம் திகதி நடந்த பின் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரை அரசியல் பழிவாங்கும் நோக்கம் தனக்குகிடையாதென ஐக்கிய தேசியக்கட்சித் தலைவரும் சனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சியினரை எக்காரணம் கொண்டும் துன்புறுத்துவதற்கு இடமளிக்கமாட்டேன் தேர்தலின் பொழுது நடக்கும் அசம்பாவிதங்களை பரிசீலனை செய்வதற்கு சுயாதீன சபை ஒன்று நிறுவப்படும். ஒரு நாட்டு மக்களை இன்மத பேதமின்றி எல்லோரையும் சமமாக நடத்துவேன் சனாதிபதித் தேர்தலின் பின் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் எம்முடன் இணைந்து இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முன்வர வேண்டுமென ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியுள்ளார்.

***-உதவி வைத்திய அதிகாரிகள்-***

# மூன்று கோரிக்கைகளை முன்வைத்து 19ஆம் திகதிமுதல் வேலை நிறுத்தம்

(கொழும்பு)

மூன்று கோரிக்கைகளை முன்வைத்து உதவி வைத்திய அதிகாரிகள் அரசவைத்தியத்துறையின் சிரேஷ்ட ஊழியர்கள் களஞ்சிய பொறுப்பாளர்கள் மற்றும் 21 சுகாதார ஊழியர் சங்கங்கள் எதிர்வரும் 19ஆம் திகதி தொடர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளனர். 19ஆம் திகதி கொழும்பில் அதிக எண்ணிக்கையாக அன்றையதினம் மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றையும் நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளனர். சமயாசமய சுகாதார ஊழியர்களை நிரந்தரமாக்குதல் 2004ஆம் ஆண்டு அரசாங்கத்தால் அதிகரிக்கப்பட்ட 50 சதவீத சம்பள உயர்வை சுகாதார சேவைஊழியர்களுக்கும் வழங்குதல் மற்றும் அரசாங்கத்தால் அதிகரிக்கப்பட்ட 1250 ரூபா சம்பள உயர்வு வழங்குதல் போன்ற கோரிக்கைகள் முன்வைக்கப் பட்டுள்ளன.

# சூழ்ச்சிகளுக்கு பலியாகும் அநுராவின் பரிதாப நிலை..

**உப்புள் ஜோசப் பர்னாந்து (லங்காதீப)**
**தமிழில் வடிவேல்**

**1959** ஆம் ஆண்டு சிறிலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த சிலர் எஸ்.டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க அரசியலை கைவிட வேண்டும் என கோஷமெழுப்பினர். இவர்கள் வேறு யாருமல்ல பண்டார நாயக்கவின் பணத்தினால் 1956 ஆம் ஆண்டு தேர்தலுக்கு கட்டுப்பணம் செலுத்தி போட்டியிட்டவர்களும் அவரது பணத்தினாலேயே தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டி கூட்டம் நடத்தி பிரச்சாரம் செய்து பாராளுமன்றுக்குத் தெரிவானவர்களுமவர்.

அதே போன்றே இப்போதும் சனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற அநுராபண்டார நாயக்கவின் உதவி தேவையில்லை என்றும் அவருடன் ஒப்பந்தம் செய்யத் தேவையில்லை எனக்கூறும் கட்சி ஆதரவாளர்களும் உறுப்பினர்களும் கட்சிக்குள் இருக்கின்றனர்.

எனவே இதனை தகப்பனுக்கு செய்தது போன்ற துரோகம் என்று நினைக்க முடியுமா? அதனை இப்போது கூறமுடியாது. ஆனால் அநுராவை அரசியலுக்கு மட்டுமன்றி றோஸ்மீட் இல்லத்திற்கு அழைத்து வந்த அமைச்சர்களிடமும் உறுப்பினர்களிடமும் பிரதமர் பதவியை அவர் கெஞ்சிக் கேட்கவேண்டிய அவசியம் கிடையாது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை வளர்த்தெடுக்க பண்டாரநாயக்க, அநுராவுக்குரிய சொத்துக்களை விற்று பணத்தை செலவு செய்தார். அவ்வாறு இல்லையெனில் பெரும் சொத்துக்கள் அநுராவை வந்தடைந்திருக்கும். தற்போது அவருக்குரியதாகவுள்ள ஹொரகொல்ல வளவு அவரது பாட்டனார் வழங்கியதாகும். அநுராவுக்கு பண்டாரநாயக்க கொடுத்துவிட்டுச் சென்றது மக்கள் சேவை ஒன்றே. அதற்கு உதாரணமாக அவர் அநுராவின் நினைவுப் புத்தகத்தில் "ஒரு மனிதனின் பிரதான கடமை இன்னுமொருவனுக்கு சேவை செய்வதே" என்ற வாசகத்தை எழுதியமையாகும். அதற்காக அவர் கொடுத்துவிட்டுச் சென்ற சொத்து "சிறிலங்கா சுதந்திரக்கட்சி" என்பதாகும். அதேபோல அநுராவும் கட்சியை தனது சொத்தாகவே பேணி வருகிறார். அதற்காக தனது வாழ்க்கையையே அர்ப்பணம் செய்கிறார். எனினும் அதே கட்சி அவருக்கு துரோகி என்ற பட்டத்தை சூட்டுகிறது. அவர் கட்சிக்காக செய்யும் தியாகம் ஒரு காசுக்குக் கூட மதிக்கப்படுவதில்லை.

1980 ஆம் ஆண்டு சிறிமாவோவின் குடியுரிமை பறிக்கப்பட்ட பின்னர் அத்தனகல்ல தொகுதிக்கு போட்டியிட வேண்டிய அவருக்கு தொம்பே என்ற தேர்தல் தொகுதியே வழங்கப்பட்டது. அதேபோன்று 1988 ஆம் ஆண்டு கிடைக்க வேண்டிய சனாதிபதி வேட்பாளர் நியமனமும் மறுக்கப்பட்டது. எனினும் அவர் கட்சிக்காகப் பாடுபட்டார். 1977 முதல் 1989 வரை எதிர்க்கட்சியில் அதாவது சுதந்திரக்கட்சியில் விரல்விட்டு எண்ணக்கூடிய உறுப்பினர்களே இருந்தனர். அப்போதைய ஆளும் கட்சி ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் ஆட்சி செய்தது. பிரேமதாசா, காமினி திசாநாயக்க, லலித் அத்துலத்முதலி ரொனிடிமெல் போன்ற பிரபலமானவர்கள் மத்தியில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மௌனிகளாக செயற்படவேண்டியேற்பட்டது. எனினும் அநுரா பயமின்றி எதிர்க்கட்சி சார்பில் குரல் எழுப்பினார். அத்துடன் மேற்கூறப்பட்ட பிரபலங்களுக்கிடையே கருத்து மோதலை உருவாக்கி மீண்டும் சிறிலங்கா கட்சியின் செல்வாக்கை உயர்த்தினார். அப்போதும் அவர் தனக்கு சனாதிபதிப் பதவியையோ பிரதமர் பதவியையோ எதிர்பார்க்காமல் கட்சியின் வெற்றிக்குப் பாடுபட்டார். சனாதிபதி வேட்பாளரும் தனது தாயாருமான சிறிமாவோவுக்கு வெற்றி வேண்டி ஜே.வி.பியுடன் சமரசம் செய்ய முயன்றார். அது தோல்வியுற்று ஐ.தே.கட்சியை ஜே.வி.பி ஊழலான கட்சி என வர்ணித்தது போன்று தமது கட்சியை விமர்சித்தபோதும் அவர் அஞ்சவில்லை. அத்துடன் வடக்கு கிழக்கிற்கு சென்று தமிழர்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காக தனது உயிரையும் துச்சம் என நினைத்து விடுதலைப்புலிகளிடம் சென்று பேசினார்.




அப்போதும் அவர் பதவியை எதிர் பார்க்கவில்லை. 1988 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக்கூட்டம் ஒன்றில் ஆதரவாளர்கள் கைதட்டி ஆரவாரம் செய்து அவரை எதிர்கால பிரதமர் எனக் கோஷமிட்டபோதும் அவர் சுதந்திரக்கட்சி தனது குடும்பத்துக்கு மட்டும் சொந்தமல்ல. வேறு சிரேஷ்ட உறுப்பினர்களும் பிரதமராக வரலாம் என்று கூறினாா.

எனினும் கட்சி தோல்வியுற்றது. அவருக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவிகூடக் கிடைக்கவில்லை. அதன்பின்னர் சிறிமாவோவின் உடல் நலக்குறைவாலும் கட்சி தோல்வியைச் சந்தித்ததாலும் கட்சித் தலைமையை பொறுப் பெடுக்குமாறு சிலர் தெரிவித்தபோது சிறிமாவோ இருக்கும் வரை தான் தலைமைப் பொறுப்பை ஏற்க முடியாது எனத் தெரிவித்தார். ஆனால் அடுத்துவரும் பொதுத் தேர்தலிலாவது வெற்றிபெற வேண்டுமெனக் கருதி கட்சியை மறுசீரமைக்குமாறு கோரினார். எனினும் சிலர் அதை ஏற்க மறுத்தனர். அத்துடன் சிறிமாவோவுக்கு எதிராக செயற்படுவதாகவும் கூறினர். அதன்மூலம் அநுராவை மௌனமாக்கி சந்திரிகாவை தலைமையேற்குமாறும் கூறினர். அப்போதும் அநுரா கட்சிக்கு எதிராக செயற்படவில்லை. இதனை வாய்ப்பாகக் கருதிய பிரேமதாசா அநுராவுக்கு பிரதமர் பதவி வழங்குவதாகவும் தனது கட்சியில் இணையுமாறும் அழைத்தார். எனினும் இதற்கும் அநுரா மயங்கிவிடவில்லை.





இவ்வளவு செய்தும் கட்சி அவரை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. 1994 ஆம் ஆண்டு அவர் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடவிருந்த வேளை கட்சியினர் சிறிமாவோவுக்கும் தெரியாமல் சந்திரிகாவை சனாதிபதி வேட்பாளராக நியமித்தனர். இதனை அநுரா ஆட்சேபிப்பார் என்று அஞ்சிய கட்சியினர் சிறிமா வோவைக் கொண்டே அவரது கட்சி அங்கத்துவத்தை நீக்கிவிட்டனர்.



இதனால் செய்வதறியாத நிலையிலிருந்த அநுரா ஐ.தே.கட்சியில் இணைந்தார் என்று கூறுவதைவிட சுதந்திரக்கட்சியே இணைய வைத்தது என்று கூறலாம். அதன்பின்னர் 1994 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐ.தே.கட்சியின் பட்டியல் எம்.பியாக பாராளுமன்றுக்கு தெரிவானார். அப்போதும் சபாநாயகராக வர தமக்கு வாக்களிக்குமாறு சுதந்திரக்கட்சியை அநுரா கேட்டபோது கட்சி மறுத்தது.

2000 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஐ.தே. கட்சி சார்பில் பாராளுமன்றத்துக்கு தெரிவாகிய அநுராவை சபாநாயகராக நியமிக்குமாறு சுதந்திரக்கட்சி கோரியதற்கு காரணம் அதற்கு பாராளுமன்றில் பெரும்பான்மை பலம் இல்லாதிருந்தமையாகும். ஆயினும் ஐ.தே கட்சியின் ஆதரவில் அநுரா சபாநாயகராக பதவியேற்றார். அதனைத் தொடர்ந்து 2001 ஆம் ஆண்டு ஐ.தே.கட்சி அரசு மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை சுதந்திரக்கட்சி கொண்டுவந்து அதனை விவாதத்துக்கு எடுப்பதா இல்லையா என்று சபாநாயகரான அநுராவிடம் கேட்டபோது, அவர் சுதந்திரக்கட்சிக்கு சார்பாக அதாவது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை சபையில் விவாதிக்க அனுமதியளித்தார். இதன்விளைவு அநுரா ஐ.தே.கட்சியிலிருந்து நீங்கினார். 2001 ஆம் ஆண்டு தேர்தலில் சுதந்திரக்கட்சி சார்பில் போட்டியிட்ட அநுரா கட்சி தோல்வியைச் சந்தித்ததால் எதிர்க்கட்சித் தலைவராக வரும் சந்தர்ப்பம் இருந்தது. எனினும் அது மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டது. அதனையும் அநுரா பொறுத்துக் கொண்டார். ஆயினும் அவர் இரவுபகலாக ஐ.தே. கட்சியை தோல்வி காணச் செய்யவே இப்போதும் பாடுபடுகிறார். அவர் ஜே.வி.பி யுடன் கூட்டணி அமைக்க முழுக்காரண கர்த்தாவாக இருந்தார். எனினும் 2004 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஆட்சிக்கு வந்த அக்கட்சி அநுராவை மறந்துவிட்டு மகிந்தவை பிரதமராக்கியது.

அதிலும் பொறுமையை கடைபிடித்த அநுரா இறுதியாக சந்திரிகா அரசியலமைப்பை மாற்ற முடியாதுவிட்டால் தனக்கு சனாதிபதி வேட்பாளர் நியமனம் கிடைக்கும் என நினைத்தார். அதுவும் மகிந்தவுக்கு வழங்கப்பட்டுவிட்டது. அவருக்கு தற்போது பிரதமர் வேட்பாளர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. எனினும் அநுரா அதற்காக கவலைப்படாது தனக்கு அடுத்தபடியாக இருக்கும் தன்னை மீண்டும் சுதந்திரக் கட்சிக்குள் கொண்டுவந்து சேர்த்த மகிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொண்டு தற்போது தேர்தல் களத்தில் குதித்துள்ளார்.

இதேவேளை தற்போது கட்சியினர் மகிந்தவுக்கு ஆதரவாக ஜே.வி.பி யை இணைத்துக்கொண்டு அநுராவுக்கு கிடைத்துள்ள பிரதமர் வேட்பாளர் நியமனத்தை பறித்து ஜே.வி.பி யினருக்கு வழங்கும் சூழ்ச்சிகளில் ஈடுபடுவதாகவும் தெரியவருகிறது. அதாவது மகிந்தவுக்கும் அநுராவுக்குமிடையில் மோதலை உருவாக்கி பிளவை ஏற்படுத்துவதே அந்த சூழ்ச்சியாகப்படுகிறது.

இந்த சூழ்ச்சிகளைப் புரிந்துகொண்டு கவலையடைந்த நிலையிலேயே அநுரா வெளிநாடு பயணமானார். எனினும் தனது கவலையை மாற்றிக்கொண்டு மீண்டும் நாடு திரும்பிய அநுராவுக்கு மீண்டும் ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. அதாவது மகிந்தவுக்கு ஆதரவாக அநுரா மேடைகளில் பேசுவதாயின் அநுரா மகிந்தவிடம் தான் பிரதமராக நியமனம் பெற்றதை உறுதிப்படுத்த வேண்டும் என கேட்டுள்ளார் என்ற வதந்தி பரவியமையாகும். இது மகிந்தவிடமிருந்து அநுராவைப் பிரிக்கும் ஒரு சதியாகும். அது உண்மையானால் அநுரா தேர்தல் பிரச்சாரங்களில் கலந்துகொள்ள மாட்டார். அவ்வாறு அவர் கலந்து கொள்ளாதுவிட்டால் இரண்டு விளைவுகள் கிடைக்கும். ஒன்று மகிந்த வென்றால் அநுராவுக்கு பிரதமர் வேட்பாளர் பதவி கிடைக்காமல் போகும். இரண்டாவது மகிந்த தோல்வியுற்றால் மகிந்தவையும் அநுராவையும் துரத்திவிட்டு ஜே.வி.பி எதிர்க்கட்சித் தலைமையைப் பெற்றுக் கொள்வதாகும்.

தற்போதைய சனாதிபதித் தேர்தலில் மகிந்த தோல்வியுற்று பொதுத் தேர்தல் நடைபெறுமாயின் அதில் சந்திரிகா போட்டியிடாவிட்டால் சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிட இருப்பது அநுரா மட்டுமே. ஆனால் அவரையும் கட்சியினர் முடித்துவிட்டால் கட்சிக்கு தலைவர் ஒருவர் இல்லாமல்போய்விடும்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சிலரின் இந்த நடவடிக்கைகளை தோல்வியுறச் செய்ய அநுராவுக்கு திறமையிருக்கின்றதா என்பது இப்போது கூறமுடியாது. அவ்வாறு அதில் அநுரா வெற்றி பெறுவாரெனில் அன்று பண்டாரநாயக்கவுக்கு செய்தமாதிரி அவரது புதல்வருக்குச் செய்வது முடியாத ஒன்றாகும்.

# தேசிய அரசமைக்கும் விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சி நாட்டம்!

## சு.க வின் மூத்த உறுப்பினர்களுடன் ஆலோசனை

(கொழும்பு)

***நாட்டில் நிலையான சமாதானத்தை உறுதிப்படுத்தும் நோக்குடன் தேசிய அரசு அமைக்கும் முயற்சியில்ஐக்கிய தேசியக் கட்சி தீவிர கவனம் செலுத்தியுள்ளதாகவும் , இது குறித்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலருடன் கலந்தாலோசித்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.***

சனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு இரண்டு பிரதான கட்சிகளினதும் தலைமைகள் இது குறித்து விரிவாக ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வருமெனவும் தெரிவிக்கப்படுகிறது. ஐ.ம.சுதந்திர முன்னணி அரசிலிருந்து ஜே.வி.பி,யும், இ.தொ.கா.வும் விலகியிருப்பதையடுத்து மீண்டும் ஆட்சி மாற்றம் ஏற்படும் நிலை தோன்றியுள்ளது.

இதனால் விரைவில் பாராளுமன்றம் கலைக்கப்படலாமென்ற எதிர்பார்ப்பும் உருவாகியுள்ளது. இந்நிலையில், இன்னொரு பாராளுமன்றத் தேர்தலுக்கு முகம் கொடுக்காமல் தேசிய அரசாங்கம் அமைக்கும் திட்டத்தை ஐக்கிய தேசியக் கட்சி முன்னெடுக்க விரும்புவதாகத் தெரியவருகிறது.

ஐ.தே.க. தலைவரும் சனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க இது குறித்து தனது விருப்பத்தை அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில்தான் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலருடன் உத்தியோகப்பற்றற்ற முறையில் ஐ.தே.கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் தேசிய அரசு அமைப்பது குறித்து கலந்துரையாடி அவர்களது விருப்பத்தைக் கேட்டறிந்துள்ளனரென்றும் தெரிவிக்கப்படுகிறது. தற்போது தனிப்பட்ட விஜயமாக லண்டன் சென்றிருக்கும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கொழும்பு திரும்பியதும் தேசிய அரசு குறித்து அவரின் கருத்தை அறிவதற்கும் ஐ.தே.க. திட்டமிட்டிருப்பதாக குறிப்பாக, சனாதிபதித் தேர்தல் முடிந்தவுடன் அடுத்த சனாதிபதி யார் என்பது தெரிந்ததும் தேசிய அரசு குறித்த உத்தியோக பூர்வ பேச்சுக்கள் உடனடியாக முன்னெடுக்கப்படும் சாத்தியமுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

இதேவேளை, தேசிய அரசு அமைக்கும் விடயத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி விருப்பம் கொள்ளவில்லையென்றும் சனாதிபதித் தேர்தலில் யார் வெற்றியீட்டுகிறார்கள் என்பதைப் பொறுத்தே சிறிலங்கா சுதந்திரக் கட்சி இது விடயத்தில் முடிவெடுக்குமென்றும் கூறப்படுகிறது.

# தேர்தல் பிரச்சார மேடைகளை இடி,மின்னல் தாக்கும் அபாயம்

(கொழும்பு)

நாட்டில் காணப்படும் சீரற்ற காலநிலை காரணமாக தேர்தல் பிரச்சார மேடைகளை இடி, மின்னல் தாக்கக்கூடிய அபாயம் காணப்படுவதாக எச்சரிக்கப்பட்டுள்ளது. கொழும்பு பல்கலைக்கழகத்தின் பௌதிகவியல் சிரேஸ்ட விரிவுரையாளர் சந்திம கோமஸ் அந்த எச்சரிக்கையினை விடுத்துள்ளார்.

தேர்தல் பிரச்சார மேடைகள் பெரும்பாலும் தகரங்களால் அமைக்கப்படுவதால் இடி, மின்னல் தாக்கத்துக்கு அவை உள்ளாகலாமெனவும், இதனால் மேடைகளிலிருக்கும் அரசியல் பிரமுகர்களுக்கும், ஏனையவர்களுக்கும் பாதிப்பு ஏற்படலாமெனவும் அவர் கூறினார்.

தற்பொழுது காணப்படும் மோசமான காலநிலையே இதற்கு முக்கிய காரணமெனச் சுட்டிக்காட்டியுள்ள விரிவுரையாளர், பெரும்பாலான பிரச்சாரக் கூட்டங்கள் பொது மைதானங்களில் நடாத்தப்படுவதாகவும், இதுவும் பாதிப்பினை ஏற்படுத்துமெனவும் தெரிவித்தார்.

# குண்டுப் புரளி ஏற்படுத்திய பெண் அதிகாரிக்கு கட்டாய விடுமுறை

(கொழும்பு)

சிறிலங்காவின் கட்டுநாயக்க விமான நிலையத்தில் குண்டுப்புரளிகளை ஏற்படுத்தியதில் தொடர்புடையதாகக் கருதப்படும் பெண் அதிகாரி ஒருவர் கட்டாய விடுப்பில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

பசிபிக்ஏர்லைன்ஸ் விமானத்தில், குண்டு இருப்பதாக தொலைபேசித் தகவல் கிடைத் துள்ளது என்று கடந்த 9 ஆம் திகதி அந்தப் பெண் அதிகாரி தெரிவித் துள்ளார். இதையடுத்து விமான நிலைய நிர்வாகத்தினர் தொடர்ச் சியான விசாரணைகளை மேற் கொண்டனர்.

இந்த விசாரணைகளின் முடிவில் செப்ரெம்பர் ஒன்பதாம் திகதி மற்றும் ஒக்ரோபர் மூன்றாம் திகதிகளில் சவூதி அரேபிய மற்றும் சிறிலங்கா ஏர்லைன்ஸ் விமானங்களில் குண்டுப் புரளியை ஏற்படுத்தியதில் பெண் அதிகாரிக்குத் தொடர்பிருப்பதாக சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து அந்தப் பெண் அதிகாரியை கட்டாய விடுப்பில் செல்லுமாறு விசாரணைக் குழு பணித்துள்ளது.

# வெளிநாட்டு வாக்காளரின் வாக்குகளை பெற நடவடிக்கை எடு…கப்பட வேண்டும்

**- வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் சங்கத் தலைவர்**

(கொழும்பு)

வெளிநாட்டில் உள்ள வாக்காளர்களின் வாக்குகளை எதிர்வரும் தேர்தலில்பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.இந்த வாக்குகள் பயன்படுத்தப்படாமல் போனால் கள்ள வாக்குகளாகப் பயன்படுத்தப்படக் கூடிய நிலை ஏற்படலாம்.

எதிர்வரும் தேர்தலில் வாக்களிக்கத் தகுதிபெற்ற ஒருகோடி 33 இலட்சம் வாக்ாகளர்களில் 15 இலட்ச வாக்காளர்கள் தொழில் வாய்ப்புகளுக்காக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர்கள் சங்கத்தின் தலைவர் சுராஜ் தந்தெனிய தெரிவித்துள்ளார்.

தமது நாட்டு குடிமக்கள் வேலை வாய்ப்புகளுக்காக வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கையில் பிலிப்பைன்சில் நடைபெறும் எந்தவொரு தேர்தலின்போது வெளிநாடுகளில் இருக்கும் அந்நாட்டு மக்கள் வசிக்கும் நாடுகளில் இருக்கும் தமது தூதரகங்களுக்குச் சென்று வாக்களிக்கக் கூடிய வகையிலான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சிறிலங்காவும் அந்த வழியை பின்பற்றலாம். அது சாத்தியமில்லையெனில் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கு செல்பவர்களுக்காக தபால் மூல வாக்களிப்பினையாவது ஏற்பாடு செய்யலாம் என்றார் அவர்.

# டயகமகிழக்கில் பெருவெள்ளம்; 200 குடும்பங்கள்இடப்பெயர்வு

(கொழும்பு)

டயகம கிழக்குப் பகுதியில் ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக அல்லோரி போட்மோர் ஆக்கவூவா, வெவரெலி மண்ராசி, பகுதியின் ஆற்றுப்பகுதியில் வசிக்கும் சுமார் 200 குடும்பங்கள் பொலிசாரால் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் தற்சமயம் ஆடலி பாடசாலையில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ள அனர்த்தம் ஏற்பட்டதன் பின்னர் ஆற்றுக்கு அருகில் வசிக்கும் மக்களை அக்கரைபத்தனை பொலிசார் பாதுகாப்பான பகுதிகளுக்கு செல்லுமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

நேற்று பிற்பகல் பெய்த கடும் மழையின் பின்னரே இந்த நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வெள்ளம் காரணமாக சில குடியிருப்புகள் சேதமடைந்தன..

தற்போதைய நிலையில் வெள்ள அபாயம் குறைந்துள்ளபோதும் டயகம மேற்கு பகுதிக்கும் டயகம கிழக்குக்கும் இடையிலான தொடர்பு வெள்ளம் காரணமாக இன்னும் துண்டிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பிரதேசத்தில் மின்சார விநியோகமும் துண்டிப்புக்கு உள்ளாகியுள்ளது.இதேவேளை 1972 ஆம் ஆண்டுக்கு பின்னர் பிரதேசத்தில் ஏற்பட்ட பாரிய வெள்ளம் இது என பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

# மதுப்பாவனை அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் பாடசாலை மாணவர்களிடையே மதுப் பாவனை அதிகரித்துள்ளதாக யுனிசெப் அமைப்பு தெரிவித்துள்ளது. பாடசாலைக்குச் செல்லும் ஆண், பெண் இரு பாலாரிடையே இந்த எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுவதாக யுனிசெப் அமைப்பின் இளைஞர், மற்றும் எச்.ஐ.வி.தடுப்பு தொடர்பான திட்டமிடல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

பாடசாலைக்குச் செல்லும் அநேக மாணவர்கள் பியர் போன்ற குடிவகைகளை அருந்துவதாக யுனிசெப் அமைப்பு கூறுகின்றது.




06

தமிழகம் சேலம் அருகே தனியார் பேருந்து ஒன்றும் பாரவூர்தி ஒன்றும் விபத்துக்குள்ளாகியதில் ஒன்பது பேர் உடல் நசுங்கிப் பலி;

பீகார் சட்ட சபைக்கு முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள நிலையில் பா.ஜ தேர்தல் பிரச்சார மேடையில் வைத்து முன்னாள் மந்திரி மீது இனந்தெரியாத நபரினால் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.

நேபாளத்தில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுடன் தொடர்பு வைத்திருந்தனர் எனக் கூறி கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்ட பத்திரிகையாளர் ஒருவர் மரணம்.

07

பாகிஸ்தானின் தலைநகர் இஸ்லாமபாத்திலிருந்து 160 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள மாங்கிராமத்திலுள்ள அஹ்மதி எனும் முஸ்லிம் பிரிவினரின் மசூதியில் வழிபாடு நடத்திக் கொண்டிருந்தவர்கள் மீது இனந்தெரியாதோர் நடத்திய தாக்குதலில் 8 பேர் பலி; 18 பேர் காயம்.



தெற்கு தாய்லாந்தில் முஸ்லிம் ஆயுததாரிகள் எனச் சந்தேகிக்கப்படுவோர் பௌத்த விவசாயி ஒருவரின் தலையைத் துண்டித்துள்ளனர்.

08

தென்னாசியாவின் வடபகுதியில் ஏற்பட்ட பாரிய பூகம்பத்தில் பாகிஸ்தானிலும் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியாகினர் 41 ஆயிரம் பேர் காயமடைந்தனர்.



கவுதமாலாவில் வீசிய சூறாவளியின் கோரத் தாக்குதலிற்கு பலியானோர் தொகை 1000 இற்கும் மேல் தாண்டியதுடன் ஒரு கிராமமே மண்ணுக்குள் புதைந்து போனதில் 71 பேர் பலியாகினர்.

09

பாகிஸ்தானில் பூகம்பத்திற்கு பலியானவர்களிற்கு அஞ்சலி செலுத்தும் வகையில். பாகிஸ்தானில் மூன்று நாட்களை தேசிய துக்கதினமாக அறிவிப்பு.

இந்தியாவின் அசாம் மாநிலத்தில் திமாரா மற்றும் சுர்பிஸ் ஆகிய இரு பழங்குடியினத்தவருக்கிடையே ஏற்பட்ட மோதலில் எட்டுப் பேர் வெட்டிக் கொலை.

பிலிப்பைன்ஸின் தென் தீவான மின்டேனோவில் கம்யூனிஸ்ட் தீவிரவாதிகள் மேற்கொண்ட திடீர் தாக்குதலில் ஐந்து இராணுவ வீரர்களும் நான்கு சிவிலியன்களும் கொல்லப்பட்டனர்.

சீனாவின் கிழக்கு பகுதியில் பேருந்தொன்று பாலத்திலிருந்து விலகி ஆற்றுக்குள் விழுந்து விபத்துக்குள்ளானதில் 20 பேர் பலியாகினர்.

10

சீனா இரண்டாவது முறையாக ஷென்ஷோ- 4 என்ற விண்வெளி ஓடத்தை விண்ணில் செலுத்தியது.

ஆப்கானில் கிளர்ச்சிவாதிகள் மேற்கொண்ட பதுங்கித்தாக்குதலில் பொலிஸ் அதிகாரி ஒருவர் உட்பட 18 பொலிசார் சம்பவ இடத்தில் பலியானதுடன் 4 பேர் காயமடைந்தனர்.

டர்பூரில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட 36 ஐரோப்பிய ஒன்றிய ஊழியர்களும் விடுதலை செய்யப்பட்டனர்.

11

ஈராக்கில் தலபர் என்ற இடத்தில் இடம் பெற்ற தற்கொலைக் கார்க்குண்டுத் தாக்குதலில் 30 பேர் வரை பலியாகினர் பலர் காயமடைந்தனர்.

12

சட்டவிரோதமாக குடியேறிய பெருந்தொகையான ஆபிரிக்கர்களை மொரோக்கோ விசேட விமானம் ஒன்றின் மூலம் நாடுகடத்தியது.

ஈராக்கில் இராணுவத்துக்கு ஆள்திட்டும் நிலையமொன்றுக்குள் குண்டொன்று வெடித்ததில் 30 ஈராக்கியர் உயிரிழப்பு; 35 பேர் காயம்.

# கலாலயா

பயிற்சியகம்

மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம்,
(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

20 வருடகால ஈடிணையற்ற பயிற்சி நிலையம்.

**மகளிருக்கான துரித 3 மாதகாலப் பயிற்சிகள்**

- **கேக் ஐசிங்:** 22 வகையான கேக் அமைப்புக்களில் சகல விதமான ஐசிங் முறைகள், மாச்சீனி மலர்கள் (Sugar Crafting) செய்தல்.
- **கூந்தல் அலங்காரம் :-** 20 வகையான கொண்டைகள் (Hair Styles) போடுதல்.
- **உணவு தயாரித்தல்:-** மேலைத்தேச, கீழைத்தேச உணவுகள், சிற்றுண்டிகள் தயாரித்தல்.
- Fabric Painting :- துணிகளில், சாடியில் வர்ணந் தீட்டுதல்.
- **பூவேலை:-** கடதாசியிலும், துணியிலும் மலர்கள், மலர்ச்செண்டு தயாரித்தல்.
- **கைவேலை:-** கடதாசியிலும் துணி மற்றும் முத்துக்களில் வேலைப்பாடுகள் செய்தல்.

**அடிப்படை முக அழகுக்கலை (Basic Facial) மணமகள் அலங்காரங்கள் வித்தியாசமான முறைகளில் சேலை அணிதல் என்பன 02 நாட்கள் நடைபெறும்.**

**துரித ஆறு மாதகால தையல் பயிற்சிகள்.**
(சிறுவர், மகளிருக்கான உடைகள் தயாரிப்பதற்கு பயிற்றுவிக்கப்படும்.)
அனைத்து பயிற்சிகளின் முடிவில் சான்றுதழ் வழங்கப்படும்.

**சனி, ஞாயிறு, புதிய பிரிவுகள் ஆரம்பம்:-23.10.2005**
**கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம்:-24.10.2005**

மேலதிக விபரங்களை வெள்ளி தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.30 வரை நேரில் அறிந்துகொள்ளலாம். (சி.13073) **பதிவாளர்.**

# அஜந்தா ரெக்ஸ்ரைல்ஸ்

SALE ஸ்தாபனத்தாரின் SALE

## தீபாவளி மலிவு விற்பனை

**15.10.2005 தொடக்கம் 31.10.2005 வரை**

| | | |
|---|---|---|
| சைனா சீத்தை | M | 60/= |
| சைனா பப்ளின் | M | 55/= |
| சலூஞ்சர் | M | 60/= |
| பட்டசில்க் | M | 80/= |
| சில்க் பொலிஸ்டர் | M | 60/= |
| ஸ்கேட் & பிளவுஸ் | | 400/=தொடக்கம் |
| சாறிவகைகள் | | 375 /= தொடக்கம் |
| சூட்டிங் லெந் | | 200/=தொடக்கம் |
| சேட்வகைகள் | | 350 /=தொடக்கம் |

அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்,
54, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.222 2899

(சி.13070)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



மு/புதுக்குடியிருப்பு ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலை மாணவி செல்வி டே.அகல்யா அவர்கள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 148 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்காக பாராட்டி வாழ்த்துவதோடு சிறப்புடன் ஊக்கமளித்த அதிபர், ஆசிரியை இருவருக்கும் நன்றிகூறி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்,
அம்மா, அப்பா, சகோதரர்கள்

(6625)

# காணாமல் போனவர் பற்றிய விபரம்

**முழுப்பெயர்:-** டொமினிக் ஜீவா (மோகன்)-மேரிமதுசா

**பிறந்தஆண்டு:-**1996.10.30,

**வயது:-**09,

**தாயின்பெயர்:-**மேரிஆன்வின்சி,

**சகோதரரின் பெயர்:-** அன்ரனி துசாந் (தர்சன்),

**சொந்த இடம்:-** வண்ணாங்குளம், முல்லைத்தீவு.



## மேரிமதுசா

கடந்த 2004.12.26 அன்று ஏற்பட்ட கடல் அனர்த்தத்தின் போது மேரிமதுசா என்பவர் உயிருடன் நீரில் இருந்து மீட்கப்பட்டு யாரோ இவரைக் கொண்டு போய் விட்டனர். ஆனால் இந்த விபரம் எமக்கு எப்படித் தெரியவந்தது என்றால் மேரிமதுசா வவுனியாவில் இருந்து சக்தி F.M. வானொலியில் தனது குடும்ப விபரங்களைக் கூறிக் கதைத்துள்ளார். ஆனால் அவர் எங்கு இருக்கிறார் என்பதை விபரமாகக் கூறவில்லை. இவருடைய தந்தை டொமினிக் ஜீவா கடல் அனர்த்தத்தின் போது இறந்துவிட்டார். இப்பிள்ளையினுடைய தாயார் கணவனை இழந்த நிலையிலும் இந்தப் பிள்ளையைத் தேடியவண்ணமே உள்ளார். ஆனால் மதுசாவைப்பற்றிய விபரம் இத்தாயாருக்கு இன்னும் கிடைக்கவில்லை. எனவே இந்தப்பிள்ளையைப்பற்றிய விபரம் தெரிந்தவர்கள் அல்லது பிள்ளையை வைத்திருப்பவர்கள் கீழ் உள்ள முகவரியில் தொடர்பு கொண்டு அத்தாயாராகிய என்னிடம் ஒப்படைக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி,**
**டொ.மேரிஆன்வின்சி,**
**வண்ணாங்குளம் A முகாம்,**
**வீட்டு இலக்கம் 09,**
**உண்ணாப்புலவு, முல்லைத்தீவு.**

தகவல்,- தாய்.
டொ.மேரிஆன்வின்சி

(சி.13072)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஜெ.தட்சாயினி
புள்ளிகள்:-157
மாவட்ட நிலை:-01



க.ரட்ணப்பிரியா
புள்ளிகள்:-135



சி.சிந்துஜன்
புள்ளிகள்:-127

2005ஆம் ஆண்டிற்கான தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் எமது பாடசாலையைச் சேர்ந்த மூன்று மாணவர்களும் சித்தியடைந்துள்ளமையையிட்டு அவர்களை நாம் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சபை,
மு. கோம்பாவில்விக்கினேஸ்வராவித்தியாலயம்,
புதுக்குடியிருப்பு.

(6626)

# குறைந்த கட்டணத்தில் உங்கள் பயணங்களை இலகுவாக்குங்கள்

MANOJ AIR TOURS (PVT) LTD

கொழும்பு சென்னை இரு வழி 18500/=
பாங்கொக் இருவழி 20500/=
சிங்கப்பூர் இருவழி 24000/=

பாங்கொக் சிங்கப்பூரில் சலுகைக் கட்டணத்தில் தங்குமிட வசதிக்கும் எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.

யாழ். - கொழும்பு இருவழி - 10990/=
யாழ். - கொழும்பு ஒருவழி - 6275/=

MANOJ AIR TOURS (PVT) LTD
32, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்
021 2223916
021 2222007

கொழும்பு
0112390128
0112361660
HOTLINE 0777517019.

(சி-13036)

# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## கப்டன் செஞ்சுடர்/ ஜோதி

**புஸ்பநாதன் ஜெகன்**
**(நல்லூர்-யாழ்ப்பாணம்)**

தானைத்தலைவர் கொண்டவிடுதலைப்புலிமறவர்
சேனை வீரன் வீர ஜோதியென நின்று பிரகாசித்த
தானையொப்ப பசீலன் படையணியில் முன்னின்று
அணை கொள்கோட்டை ஆதிக்கரைப் புறங்கண்ட
துணை நின்று புலிப்படை நகர்த்தி விழுப்புண் கண்ட
தனையொத்த வீரரிடை நகைச்சுவையில் மிளிர்ந்த
ஆனை பெற்று "சூரியகதிரை" எதிர்த்த செஞ்சுடர்
அணையா தீபமென விளங்கும் மாவீர வேங்கையானான்
எங்கள் பாசம் மிகுந்த சுடரே!
என்றும் எங்கள் சுடராக மிளிரவேண்டுமென
நித்தம் நித்தம் உன்னை பூஜிக்கிறோம்.



தாயின் மடியில்:- 19.07.1972
தாயக மண்ணில்:- 17.10.1995

முகவரி,
K.S.K. வீதி,
அக்கராயன்குளம்

உன் நினைவால்
தாய், சகோதரர்கள், மச்சாள்மார்,
மச்சான்மார், மருமக்கள்

(6847)

# காஷ்மீர் முதல்வராக முப்தி முகமது சயீத் தொடர்ந்து நீடிப்பார் என்கிறது காங்கிரஸ்

**காஷ்மீர் முதல்வர் முப்தி முகமது சயீத்தை பதவியில் நீடிக்க அனுமதிப்பது என்று காங்கிரஸ் தலைமைப்பீடம் முடிவு செய்துள்ளது.**

காஷ்மீரில் 2002 செப்ரெம்பர், ஒக்ரோபரில் சட்டமன்றத் தேர்தல் நடைபெற்றது. அதில் காங்கிரஸ்-மக்கள் சனநாயகக் கட்சிக் கூட்டணி அதிக இடங்களை வென்றது. பதவிக் காலத்தை சமஅளவில் பகிர்ந்து கொள்ள இரண்டு கட்சிகளும் ஒப்பந்தம் செய்துகொண்டன. காங்கிரசுக்குக் கூடுதல் இடங்கள் கிடைத்த போதும் முதலில் ஆட்சி அமைக்க விரும்பிய மக்கள் சனநாயகக் கட்சிக்கு வாய்ப்புக் கிடைத்தது. முதல்வர் முப்தி முகமது சயீத் தலைமையிலான கூட்டணி ஆட்சி மூன்றாண்டுகளை நிறைவு செய்கிறது.

ஒப்பந்தப்படி அடுத்த மாதத்துக்குள் முப்தி முகமது சயீத் விலகி காங்கிரசைச் சேர்ந்த ஒருவர் முதல்வராகப் பதவி ஏற்கவேண்டும். காஷ்மீரைச் சேர்ந்த மத்திய அமைச்சர் குலாம் நபி அசாத் அடுத்த முதல்வராவார் என்று காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. முப்தி முகமது பதவி விலகி காங்கிரஸ் அரசு அமைக்க வழிவிட வேண்டுமென்று அசாத்தும் சமீபத்தில் கூறினார். ஆனால் அவர் முதல்வராவதை காஷ்மீரின் காங்கிரஸ் தலைவர்கள் விரும்பவில்லை. இந்து மதத்தைச் சேர்ந்த ஒருவரை முதல்வர் ஆக்க வேண்டுமென்றுமேலிடத்தை வலியுறுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் காஷ்மீர முதலவர் பதவியில் முப்தி முகமது சயீத்தைத் தொடர அனுமதிப்பது என்று காங்கிரஸ் மேலிடம் முடிவு செய்துள்ளதாக அந்தக் கட்சியின் மூத்த தலைவர் ஒருவர் டில்லியில் நேற்று முன்தினம் தெரிவித்தார்.



பாட்னாவில் நேற்று முன்தினம் நடந்த தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தியுடன் ராஷ்டிரிய ஜனதாதள தலைவர் லல்லுப்பிரசாத் யாதவ் மேடையில் அமர்ந்திருந்த போது

# ஆடம்பரத்தைத் தவிர்த்து எளிமையைப் பின்பற்றுக காங்கிரஸ் முதல்வர்களுக்கு சோனியா காட்டமான கடிதம்

ஆடம்பரத்தைத் தவிர்த்து எளிமையான முறைகளைப் பின்பற்றுங்கள் என காங்கிரசாருக்கு கட்சித் தலைவர் சோனியாகாந்தி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காங்கிரஸ் கட்சி ஆளும் மாநில முதல்வர்களுக்கு சோனியா காந்தி கடிதம் எழுதியுள்ளார். அதில் அமைச்சர்கள் உட்பட கட்சியின் முக்கிய பிரமுகர்கள் எளிமையைக் கடைப்பிடிக்க வலியுறுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளார். செய்ய வேண்டியது செய்யக்கூடாதது என 18விதிமுறைகளை சோனியா குறிப்பிட்டுள்ளார். கடிதத்தில் சோனியா கூறியிருப்பதாவது.

நமது கட்சி ஆளும் சில மாநிலங்களில் அமைச்சர்கள் உட்பட பிரமுகர்கள் சிலர் எளிமையான விதிமுறைகளை மீறி ஆடம்பரமாக மீண்டும் செயல்படுவது வருத்தம் அளிக்கிறது. மாநில அரசின் விமானங்கள் மற்றும் உலங்குவானூர்திகளை தவிர்க்கமுடியாத காரணங்களுக்கு மட்டும் பயன்படுத்தவேண்டும். எதற்காக எத்தனை முறை விமானங்கள் பயன்படுத்தப்பட்டன என்ற விபரங்கள் மாநில அரசின் இணையத் தளத்தில் இடம்பெற வேண்டும்.

அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் விமானத்தில் செல்லும் போது சாதாரண வகுப்பில் பயணம் செய்யவேண்டும். அவர்களின் வீடுகளுக்கு அரசு சார்பாக வழங்கப்பட்ட தொலைபேசிகளில் எஸ்.டி.டி. மற்றும் ஐ.எஸ்.டி வசதியை துண்டிக்க வேண்டும். ஆளுநர் முதல் அமைச்சர் தவிர மற்றவர்கள் மட்டுமே அவர்களது வாகனங்களில் சிவப்பு விளக்கு பொருத்திக்கொள்ளவேண்டும். மற்ற அமைச்சர்களுடன் வரும் கார்களில் ஒரே ஒரு வாகனத்தில் மட்டும் சிவப்பு விளக்கு இருக்கவேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரஸ் பிரதிநிதிகள் ஆண்டுக்கு ஒருமுறை தங்கள் வருமானம் மற்றும் சொத்து விபரங்களை தெரிவிக்கவேண்டும். கட்சியின் பொது நிகழ்ச்சிகள், கட்சியினரின் திருமணங்கள் ஆகியவை எளிமையாக நடைபெற வேண்டும்.

அரசு திட்டங்களுக்காக அடிக்கல் நாட்டு விழா நடத்துதல், புத்தாண்டு மற்றும் மத விழாக்களை அரசு சார்பில் கொண்டாடுவதை நிறுத்தவேண்டும். அரசு நிகழ்ச்சிகளில் விருந்துகள் நடத்தக்கூடாது. கட்சியின் விழாக்கள் மற்றும் வரவேற்பு நிகழ்ச்சியில் மாலை பூங்கொத்து, பரிசு வழங்கல் ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும். இவ்வாறு கடிதத்தில் சோனியாகாந்தி குறிப்பிட்டுள்ளார்.

# காஷ்மீரில் நிலநடுக்கம் தொடர்கிறது

காஷ்மீரில் மீண்டும் நேற்று முன்தினம் மூன்று முறை நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் மக்கள் மிக அச்சத்துடன் வீதிகளிலேயே தஞ்சம் அடைந்துள்ளனர். காஷ்மீரில் கடந்த எட்டாம் திகதி ஏற்பட்ட பூகம்பத்தில் இரண்டு ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் பலியானார்கள். ஆயிரக்கணக்கானவர்கள் காயமடைந்தனர். பூகம்பத்தால் வீடுகள் இடிந்ததால் மக்கள் வீதியோரக் கூடாரங்களில் தங்கியுள்ளனர். மீட்புப்பணி தொடர்ந்து நடந்து வருகிறது. இடிபாடுகளுக்குள் சிக்கிய பிணங்கள் அகற்றப்பட்டு வருகின்றன. கடந்த எட்டாம் திகதி பூகம்பம் ஏற்பட்ட பின் தொடர் அதிர்வுகள் 44 முறை ஏற்பட்டுள்ளது. இதனால் மக்கள் மரண பயத்தில் இருக்கிறார்கள்.

இந் நிலையில் காஷ்மீரில் நேற்று முன்தினம் மூன்று முறை மிதமான நிலநடுக்கம் உண்டானது. அதிகாலை 1.08 மணிக்கு ஏற்பட்ட நில அதிர்வு ரிச்டர் அளவுகோலில் 5.4 ஆகப் பதிவாகி இருந்தது. அது பாகிஸ்தானின் கட்டுப்பாட்டு காஷ்மீரிலுள்ள முஷபராபாத்தை மையமாகக் கொண்டு இருந்தது.

# பீகாரில் நாளை தேர்தல் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

இந்திய பீகார் மாநிலத்தில் நாளைய தினம் இடம் பெறவிருக்கும் 61 தொகுதிகளுக்கான வாக்குப் பதிவையடுத்து அங்கு தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தேர்தல் பிரச்சார கூட்டங்கள் யாவும் நேற்று மாலை ஐந்து மணியுடன் நிறைவுக்கு வந்துள்ளது.


பீகாரில் 243 சட்டசபைத் தொகுதிகளிற்கும் நான்கு கட்டமாக வாக்குப் பதிவு இடம் பெறவுள்ளது. அதில் முதல் கட்டமாக நடைபெறும் நாளைய வாக்களிப்பில் 61 தொகுதிகளைச் சேர்ந்த மக்கள் வாக்களிக்கவுள்ளனர்.

பொலிஸ் பாதுகாப்புப் போடப்படாத வாக்குச் சாவடிகளில் வாக்குப்பதிவு இடம் பெறாது என பீகார் தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

தேர்தலை கண்காணிக்க வென தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக பாதுகாப்புத் தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

தேர்தல் நடைபெறும் பகுதிகளை உலங்கு வானூர்திகள் மூலம் கண்காணிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

தேர்தல் வன்முறைகளை தடுக்கும் நோக்கில் பீகார் முழுவதும் 5000 கிரிமினல் குற்றவாளிகளை தாம் கைது செய்திருப்பதாகவும் 100 கள்ளத் துப்பாக்கிகள் தயாரிக்கும் தொழிற்சாலைகளை தாம் கண்டு பிடித்திருப்பதாகவும் மூவாயிரம் துப்பாக்கிகளையும் பத்தாயிரம் தோட்டாக்களையும் கைப்பற்றி இருப்பதாகவும் பீகார் பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.



பீகார் தேர்தல் பிரச்சாரத்துக்கு வந்த இகம்யூனிஸ்ட்டு பொதுச் செயலாளர் ஏ.பி.பரதனை பாட்னா விமான நிலையத்தில் கட்டித்தழுவி வரவேற்கிறார் லோக் ஜனசக்தி தலைவர் ராம்விலாஸ் பஸ்வான்.

# உத்தரப்பிரதேசத்தில் மதக்கலவரம் ஐந்துபேர் பலி; ஊரடங்கு உத்தரவு அமுல்!

உத்தரப்பிரதேசத்தில் நடந்த மதக்கலவரத்தில் ஐந்து பேர் பலியானார்கள். அங்கு கலவரக்காரர்களை கண்டதும் சுட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஊரடங்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு உத்தரப்பிரதேசத்தில் உள்ள மாவு மாவட்டம் மதக் கலவரத்துக்கு பெயர் பெற்ற இடமாகும். தசராவையொட்டி (விஜயதசமி) இந்துக்கள் மாவு நகரில் கடந்த வெள்ளிக்கிழமை ஊர்வலம் நடத்தினர். அந்த ஊர்வலம் மசூதி அருகே தொழுகை நேரத்தில் சென்றதால் கலவரம் வெடித்தது. கலவரத்தில் ஐந்து பேர் பலியாகி, 15பேர் காயமடைந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரண்டாவது நாளாக அங்கு கலவரம் நீடித்தது. பொலிசார் நேற்று முன்தினம் காலை கொடி அணிவகுப்பு நடத்திய நிலையிலும் சிறிய அளவில் அங்கும் இங்கும் கலவரங்கள் நடந்தன. இதனால்அங்கு தொடர்ந்து பதற்றம் நிலவுகிறது.

கலவரம் தொடர்பாக இதுவரை 89பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அரசியல்வாதிகள் யாரும் மாவு மாவட்டத்துக்குள் நுழைய தடைவிதிக்கப்பட்டுள்ளது. கலவரக்காரர்களை கண்டதும் சுட மாநில பொலிஸ் அதிகாரி உத்தரவிட்டுள்ளார். ஊரடங்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# தமிழக சட்ட சபைக்கு வரும் ஏப்ரல் அல்லது,மேயில் தேர்தல்?

தமிழக சட்டசபைக்கு வரும் ஏப்ரல் அல்லது மே மாதத்தில் தேர்தல் நடத்துவது பற்றி தலைமைத் தேர்தல் ஆணையம் பரிசீலனை செய்து வருகிறது.

234 உறுப்பினர்களைக் கொணட தமிழக சட்டசபைக்கு கடந்த 2001-ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற தேர்தலில் அ.தி.மு.க வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது.

தமிழக சட்டசபையின் ஐந்து ஆண்டு பதவிக்காலம் அடுத்த ஆண்டு (2006) மே மாதம் 13-ஆம் திகதியுடன் முடிவடைகிறது. எனவே அதற்கு முன்னதாக சட்டசபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.


அதற்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் இப்போதே தொடங்கி விட்டது. வருகிற ஏப்ரல் மாதத்தின் கடைசி வாரம் அல்லது மே மாதம் முதல் வாரத்தில் தமிழக சட்டசபைத் தேர்தல் நடத்தலாமா? என்பது பற்றி டில்லியில் தேர்தல் ஆணையக அதிகாரிகள் ஆலோசனை நடத்தி வருகிறார்கள்.

புதுச்சேரி, கேரளா, மேற்கு வங்கஎம், அசாம் ஆகிய மேலும் நான்கு மாநில சட்டசபைகளின் பதவிக் காலமும் அடுத்த ஆண்டு முடிவடைகிறது. தமிழக சட்டசபைத் தேர்தலின் போது அந்த மாநிலங்களிலும் சட்டசபைத் தேர்தலை நடததத் தேர்தல் ஆணையம் தீர்மானிததுள்ளது எனத் தெரியவருகிறது.

# வீரப்பனின் நினைவு தினத்தை அனுஷ்டிக்க ஏற்பாடு

நாளை சந்தனக்கடத்தல் வீரப்பனின நினைவு தினமாகை யால் அவரது சமாதியை வீரப்பனின் மனைவி முத்துலட்சுமி மற்றும் அவரது உறவினர்கள் சீரமைத்தனர். வீரப்பன் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 18ஆம் திகதி தர்ம புரி மாவட்டம் பென்னாகரம் அருகே அதிரடிப்படையால்சுட்டுக்கொல்லப்பட்டார்.

மேட்டூரருகே உள்ள மூலக்காட்டில் வீரப்பன்சமாதி அமைந்துள்ளது. அவரது முதலாம் ஆண்டு நினைவு தினம் நாளை நினைவு கூர ஏற்படாகியுள்ளது. இதையொட்டி கடந்த வியாழன் வீரப்பன் சமாதிக்கு அவரது மனைவி முத்துலட்சுமி உறவினர்களுடன் சென்று அங்கு சமாதியைச் சீரமைக்கும் பணி நடந்தது. பின்னர் முத்துலட்சுமி நிருபர்களிடம் கூறும் போது: எதிர்ப்புகள் இருந்தாலும் எனக்கு மக்கள் ஆதரவு அதிகமாக உள்ளது எனக் குறிப்பிட்டார். வரும் வியாழக்கிழமை வீரப்பன் சமாதியில் காரியங்கள் நடக்கவிருக்கிறது. அது முடிந்தபின அச்சங்காட்டில் அவரது நினைவு தினக்கூட்டம் நடக்கும். நிகழ்ச்சியில் தமிழர் தேசிய இயக்கத்தலைவர் பழ.நெடுமாறன், பெரியார் தி.க. தலைவர் தா.செ.மணி, பேராசிரியர் கல்யாணி, சுகுமாரன், முத்துலட் சுமி, சட்டவாளர் சநதிரசேகர், சங்கரசுப்பு மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள் எனத்தெரியவருகிறது.








# நெருக்கடி நிலையில் உலக 11 பேர் அணி
# வெற்றிக்கு அவுஸ். 355 ஓட்டங்கள் நிர்ணயம்

(சிட்னி)

உலக 11 பேர் அணிக்கு அவுஸ்திரேலியா அணி 355 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்துள்ளது.

அவுஸ்திரேலிய உலக பதினொரு பேர் அணிகள் பங்கு பற்றும் சிட்னி கிரிக்கெட் டெஸ்டின் மூன்றாம் நாளான நேற்று போதிய வெளிச்சமின்மை காரணமாக ஆட்டம் நிறுத்தப்பட்ட வேளை உலக பதினொருவர் அணி தனது இரண்டாவது இன்னிங்சில் இரண்டு விக்கெட்டுக்களை யிழந்து 25 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நேற்றுக்காலை முன்னை நாள் ஓட்ட எண்ணிக்கை 66இற்கு ஒரு விக்கெட் என்ற நிலையில் இரண்டாவது இன்னிங்சை ஆரம் பித்த அவுஸ்திரேலிய அணி பொண்டிங் கினதும், கெய்டனதும், நிதானமான ஆட்டத்தால் இரண்டாவது விக்கெட்டுக் கான இணைப்பாட்டமாக 22 ஓட்டங் களைப் பெற்றனர்.

எனினும், ஸ்ரீவ் ஹார்மிசன் இணைப்பைப் பிரித்ததும் அவுஸ் திரேலிய அணி நிலை குலைந்து மொத்தம் 199 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.




இதில் கெய்டன் 77 ஓட்டங்களையும், பொண்டிங் 54 ஓட்டங்களையும் பெற்றனர். அடுத்து பத்து ஓட்டங் களைப் பெற்று வட்சனைத் தவிர ஏனைய வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டத்துடன் ஆட்டமிழந்தனர். லாங்கர் 22 ஓட்டம் எடுத்தார். பந்து வீச்சில் ஹார்மிசன், பிளிண் டொப், முரளிதரன் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக் களையும், கலிஸ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இந்நிலையில் 355 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய உலக 11 பேர் அணி விரைவிலேயே தனது இரண்டு விக்கெட்டுக்களை இழந்துள்ளது. சேவாக் (07), ஸ்மித் (0) என்ற நிலையில் ஆட்டமிழந்தனர். தொடர்ந்த போட்டி வெளிச்சம் போதாமை காரணமாக இடை நிறுத்தப்பட்டபோது அணியின் நிலை 25/2 ஆக இருந்தது. மக்கில்லும், மெக்ராத்தும் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர். ராவிட் 17 ஓட்டங்களுடனும் லாறா ஓட்டம் பெறாமலும், களத்திலுள்ளனர். இன்று நான்காம் நாள் ஆகும்.

## இந்தியாவுடனான போட்டியில் சைமன்ஜோன்ஸ் பங்கேற்பார்



பாகிஸ்தான் சுற்றுப்போட்டியில் இங்கிலாந்து அணியில் காயங் காரணமாக இடம்பிடிக்க முடியாது போன சைமன் ஜோன்ஸ் தற்போது குணமடைந்து வருவதாகவும் அதனையடுத்து ஆரம்பமாகும் இந் தியாவுடனான போட்டியில் பங் கெடுக்க முடியும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அவருக்கு அளிக்கப்பட்ட சத்திரசிகிச்சை வெற்றி கரமாக முடிவடைந்திருப்பதாக தெரிவிக்கப்படும் அதே வேளை இங்கிலாந்துடனான ஆஷஸ் தொடரில் 18விக்கெட்டுக்களை வீழ்த்தியதுடன் வெற்றிக்குக் காரணமான இவர் பாகிஸ்தான் தொடரை இழந்தது இங் கிலாந்து அணிக்குப் பாரிய பின்னடைவாகும் இவருக்குப் பதிலாக 20 வயதான லையன் பிளங்கட் நியமிக்கப் பட்டுள்ளார்.

## கிரிக்கெட்டினால் பாக். மக்களை சிரிக்க வைக்க முடியும்



கடந்த எட்டாம் திகதி பாகிஸ் தானில் நடைபெற்ற இயற்கையனர்த் தத்தால் மிகவும் வேதனைக்குள்ளான பாகிஸ்தானிய மக்களை கிரிக்கெட் டின் உதவியுடன் சிரிக்கவைக்க முடியும். இங்கிலாந்து கிரிக்கெட்அணியின் சகல துறை வீரர் அன்ரூபிளிண்டொப் தெரிவித்துள்ளார்.

வேதனைக்குள்ளான பகுதி மக்கள் வாழு மிடத்தில் கிரிக்கெட் ஆட்டத்தின்மூலம் மகிழ்வை ஏற் படுத்த முடியுமாயின் அதுவே எமக்கு மகிழ்வைத்தரும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் இங்கிலாந்து கிரிக்கெட்சபை பாகிஸ்தானில் பாதுகாப்புத் தொடர்பில் கண்காணிப்பை நடத்துவதற்காகக் குழு ஒன்றை அங்கு அனுப்பிவைத் துள்ளது. அவர்கள் இவ்வார இறுதிக்குள் அவர்களது அறிக்கையைச் சமர்ப்பிப்பார்கள்.

## இங்கிலாந்துடனான போட்டி
## வீரர்கள் தெரிவிற்கு பாக்.இல் பயிற்சிப்போட்டி

இங்கிலாந்துடனான டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளுக்கு வீரர்களைத் தெரிவு செய்யும் நோக்கில் பாகிஸ்தான் 11பேர் அணிக்கும் ஏனையவீரர்களைக் கொண்ட அணிக்கும் இடையில் பயிற்சிப்போட்டி ஒன்று வரும் 26ஆம் திகதி முதல் 29 வரை லாகூர் நடத்ததிட்டமிடப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் ஏனைய வீரர்கள் அணியில் முஸ்டாக் அகமட் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளார். இவர் அண்மையில் இங்கிலாந்தின் சசெக்ஸ் அணிக்காக விளையாடியுள்ளார் சிறந்த விக்கெட் பெறுபவரான இவர்தான் இங்கிலாந்துடனான போட்டிகளுக்கு அழைக்கப்பட்டால் சுழல் பந்து வீச்சின் மூலம் இங்கிலாந்தின் துடுப்பாட்டவரிசையை வலையில் மாட்டி விடுவதாகக் கூறியுள்ளார். இங்கிலாந்து தற்சமயம் பிளிண்டொப் பீற்றர்சன் போன்ற வீரர்களின் திறமையில நம்பிக்கை வைத்திருப்பதாகத் தெரிவிக்கும் அகமட் அவர்களை வீழ்த்தவும் விசேட திட்டம் வகுத்திருப்ப தாகக் கூறுகிறார்.

### விசுவமடு வ. ச. கிரிக்கெட் போட்டி
## நேற்றைய லீக் போட்டிகள் சில பரபரப்புடன் கூடியதாயிருந்தது

விசுவமடு வர்த்தக சங்கம் நடாத்தும் மென்பந்து துடுப்பாட்டப் போட்டியின் லீக் முறையிலான போட்டிகள் பரபரப்பு நிறைந்த சில போட்டிகளாக நடைபெற்றன.

விசுவமடு மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றுவரும் இப்போட்டித் தொடரில் நேற்றும் நான்கு போட்டிகள் நடைபெற்றன.

, தோழர்கள் ஏ வி.கழகத்திற்கும், அருளொளி வி.கழகத்திற்கும் இடையில் முதலாவது போட்டி இடம்பெற்றது. இதில் தோழர்கள் ஏ வி.கழகம் 45 ஓட்டங்களினால் வெற்றிபெற்றது. தோழர்கள் ஏ 91/5, அருளொளி 46/5.

இரண்டாவதாக நடைபெற்ற போட்டியில் அருளொளி வி. கழகத்தை எதிர்த்து ஆடிய முத்தமிழ் வி.கழகம் 15 ஓட்டங்களினால் வெற்றிபெற்றது. முத்தமிழ் 55, அருளொளி - 40/6.

அடுத்து மூன்றாவதாக நடைபெற்ற போட்டியில் மாலதி வி. கழகமும், வளர்பிறை வி.கழகமும் மோதின. இதில் மாலதி வி.கழகம் ஐந்து ஓட்டங்களினால் வளர்பிறை வி.கழகத்தைத் தோற்கடித்தது. மாலதி 54/9, வளர்பிறை 49.

நேற்று இறுதியாக நடைபெற்ற போட்டியில் புதியதாரகை (நியூஸ்ரார்) வி.கழகத்திற்கும், பாரதி ஏ வி. கழகத்திற்கும் இடையில் இடம்பெற்றது. இதில் புதியதாரகை வி.கழகம் ஐந்து ஓட்டங்களினால் வெற்றிபெற்றது. புதியதாரகை 56/9, பாரதி ஏ 51/8.

இப்போட்டிக்கு நடுவர்களாக சுபானந், ரமேஸ் ஆகியோர் கடமை யாற்றினர். இப்போட்டித் தொடரின் லீக் முறையிலான போட்டி இன்றுடன் நிறைவடைந்து எதிர்வரும் போட்டி விலகல் முறையில் நடைபெறும் என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## கங்குலியை நீக்குமாறு டெண்டுல்கர் கோரவில்லை

### பத்திரிகைச் செய்திக்கு கிரண்மோரே மறுப்பு



சிறிலங்கா அணியுடனான ஒருநாள் தொடரில் கங்குலி சேர்க் கப்படாதமைக்குக் காரணம் சச் சின் டெண்டுல்கார்தான் என் பதைத் தேர்வாளர் குழு மறுத்துள் ளது. இது தொடர்பாக தேர்வுக் குழுத் தலைவர் கிரண்மோரே கூறியபோது கொஞ்சமும் உண்மையில்லாத செய்திகள் பத்திரிகைகளில் வெளிவந்திருக்கின்றன. டெண்டுல் கரிடம் நீங்கள் தலைவராக இருக்கிறீர்களா? என்று நான் கேட்டதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. கங்கு லியை நீக்கவேண்டும் என்று அவர் என்னிடம் சொன்ன தாக ஒரு செய்தி வந்திருக்கிறது. இதெல்லாம் முற்றிலும் தவறு நான் அப்படி டெண்டுல்கரிடம் கேட்கவும் இல்லை. அவரும் கங்குலியைப் பற்றி என்னிடம் எப்போதும் எதுவும் சொல்லவும் இல்லை என்று தெரிவித்தார்.

மொகாலியில் சேலஞ்சர் கோப்பை போட்டி நடந்து கொண்டிருந்தபோது டெண்டுல்கரிடம் இந்திய அணித் தலைவர் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று தேர்வுக் குழுவினர் கோரிக்கை வைத்தார்கள் என்றும்,ஆனால் டெண் டுல்கர் தலைவர் பதவியை ஏற்க மறுத்துவிட்டார் என்றும் தேர்வுக் குழுவுக்கு நெருங்கிய வட்டாரம் தெரிவித்ததாக பத்திரிகைச் செய்திகளில் குறிப்பிடப்பட்டு இருந்தது.

இதனையும் கிரண்மோரே திட்டவட்டமாக மறுத் திருக்கிறார். எஜ்.கே.நாயரைக் தொடர்பு கொண்டு கருத் துக் கேட்டபோது அவரும் "இது முற்றிலும் தவறான செய்தி" என்று மறுப்புத் தெரிவித்தார்.

## லெப். அகிலன் ஞாபகார்த்தக் கிண்ணம்; ஸ்கந்தா விளையாட்டுக்கழகம் சுவீகரித்தது






புதுக்குடியிருப்பு உதிக்கும் திசை விளையாட்டுக்கழகம் நடாத்திய கடற்புலி லெப். அகிலன் ஞாபகார்த்தமாக உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் ஸ்கந்தா விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

புதுக்குயிருப்பு உதிக்கும்திசை விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று நடைபெற்ற இறுதிப்போட்டியில் புதுக்குடியிருப்பு விக்கினேஸ்வரா வி.கழகமும், ஸ்கந்தபுரம் ஸ்கந்தா வி.கழகமும் மோதின.

பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் ஒவ்வொரு கோல் போட்டு சமநிலையில் இருந்த நிலையில் சமநிலை உடைப்பு மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. சமநிலை உடைப்பின் மூலம் ஸ்கந்தா அணி வெற்றி பெற்று மேற்படி அகிலன் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இதன் பின் பரிசளிப்பு நிகழ்வு நடைபெற்றது. இதில் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, விளையாட்டுத்துறை ஊடக இணைப்பாளர் தேவன் ஆகியோர் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தனர்.



## சிந்தனைக்கு

பேரினவாதச் சித்தாந்த பிடியிலிருந்து விடுதலை பெற்றுவிழிப்புணர்வு அடையும் பொழுதுதான், தமிழரின் சுதந்திரப் போராட்டத்தின் புரட்சிகரத் தன்மையைச் சிங்களமக்கள் புரிந்து கொள்வார்கள்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 17.10.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# அபாயத்தை நோக்கி

இலங்கையில் போர் ஏற்படும் அபாயச் சூழல் நிறைவதாக எச்சரிக்கின்றார் முன்னாள் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவரும் கடந்தவாரம் நோர்வேயின் சிறப்புத் தூதுவராக இலங்கை வந்தவருமான டொன்புறூவ்ஹொவ்டே. அதாவது யுத்தநிறுத்த உடன்பாடு பலவீனப்பட்டுப்போயுள்ளமையினால் போர் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது என்பதே அவரின் அறிவிப்பாகும்.

தற்பொழுது வடக்கு கிழக்கில் இடம்பெற்றுவரும் மறைமுகப் போரும் ஒரு வகையில் யுத்த நிறுத்த மீறலே என்பது அவரது கருத்தாகும். ஹொவ்டேயின் இக் கருத்தானது மறுக்கப்பட முடியாத தொன்றே. ஏனெனில் யுத்தம் ஏதோ ஒரு வகையில் நடைபெறுவது போன்றதே அதுவாகும்.

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட யுத்தநிறுத்த உடன்பாடு சமாதான முயற்சிகளை முன்னோக்கி எடுத்துச் செல்வதற்குப் போதுமானதொன்றாகும். அதாவது இவ் உடன்பாடு பூரணமாக அமுலாக்கப்படின் யுத்த நிறுத்த வாய்ப்புக்கள் இல்லாமல் இல்லை. ஆகையினால் உடன்பாடு குறித்துக் கேள்விகள் எழுவதற்கும் வாய்ப்பில்லை.

ஆனால், சிறிலங்கா ஆட்சியாளர்களோ யுத்த நிறுத்த உடன்பாட்டை இது வரையில் முழு அளவில் அமுல்செய்யத்தயாராக இருக்கவில்லை. துணை இராணுவக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்படவேண்டும் என்ற 1.8 விதி மட்டும் தான் சிறிலங்கா அரசாங்கம் நிறைவேற்றாத உடன்பாட்டுவிதியல்ல.

குறிப்பாக மக்களின் இயல்புவாழ்க்கையைத் தோற்றிவிப்பதற்கான விதிகள் நிறைவு செய்யப்படவில்லை. அதாவது மக்கள் தமது சொந்த நிலங்களில் குடியேற அனுமதிகப்படவில்லை. அவர்கள் தமது சொந்த நிலங்களில் தமது கடற்பரப்பில் தொழில் நடவடிக்கையில் ஈடுபட வாய்ப்புக் கிட்டவில்லை யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் அத்தியாவசிய தேவைகளை நிறைவுசெய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

இந்த வகையில் யுத்தநிறுத்த உடன்பாட்டின் பல விதிகள் மீறப்பட்டும் பலவிதிகள் அமுல் செய்யப்படாமலும் இருக்கையில் சிறிலங்கா அரசாங்கமே யுத்தநிறுத்த உடன்பாட்டில் மாற்றம் தேவை எனக் கோருகின்றது. தற்போதைய உடன்பாட்டில் உள்ள குறைபாடே இத்தனை நிலைக்குக் காரணம் எனவும் தெரிவிக்கின்றது.

ஆனால், அடிப்படையில் சிறிலங்கா அரசாங்கம் யுத்தநிறுத்த உடன்பாட்டை மாற்றி அமைக்கவே விரும்புகின்றது. இதற்குக் காரணம் இவ் யுத்தநிறுத்த உடன்பாட்டில் தமிழர் தரப்பிற்கு-அதாவது விடுதலைப்புலிகளுக்கு சம அந்தஸ்து அளிக்கப்பட்டுவிட்டது என்பதே அதற்கு அடிப்படையாகும். ஆகையினால் யுத்தநிறுத்த உடன்பாடு திருத்தியமைக்கப்படும் பட்சத்திலேயே புலிகளைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரமுடியும் என்பது அரசின் நோக்கமாகும்.

ஆனால், யுத்தநிறுத்த உடன்பாட்டு விதிகள் முழுமையாக அமுல் செய்யப்பட்டிருப்பின் இன்றைய நெருக்கடியான சூழ்நிலை உருவாகியிருக்கமாட்டாது. அதிலும் குறிப்பாக யுத்தநிறுத்த உடன்பாட்டின் 1.8 விதி அமுல் செய்யப்பட்டிருந்திருப்பின் மறைமுகப் போரோ அன்றிப் படுகொலைக்கோ சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கமாட்டாது.

அதாவது உடன்பாட்டின்படி தமிழ் ஆயுதக்குழுக்களின் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பின் கொலைகள் நடைபெறுவதற்கான சந்தர்ப்பங்கள் இல்லாது போயிருக்கும். அதேசமயம் உடன்பாட்டில் பல விதிகள் முடக்கத்திற்கு உள்ளாக வேண்டிய தேவையும் உருவாகியிருக்க மாட்டாது.

இதில் குறிப்பாக விடுதலைப்புலிகள் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் அரசியல் பணிவேலைகளில் ஈடுபடுவதை நிறுத்தவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கமாட்டாது மேலும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இயல்புவாழ்க்கை பாதிக்கப்பட்டு பதற்றமானதொரு சூழ்நிலை தோற்றம் பெறுவதற்கு வாய்ப்புக்கள் ஏற்பட்டிருக்கமாட்டாது.

இவற்றிற்கும் அப்பால் தனியாக யுத்த நிறுத்த உடன்பாடு ஒன்று நடை முறையில் இருப்பது மட்டும் இப்பிரச்சினைக்குத் தீர்வாக மாட்டாது. யுத்தம் ஏன் ஏற்பட்டது? தீவிரம் பெற்றது என்பன போன்ற விடயங்களுக்கும் தீர்வு காணப்படுதல் வேண்டும். ஆனால், அரசாங்கம் யுத்தநிறுத்தம் என்பதை மட்டும் வைத்துக் காலத்தைக் கடத்திச் செல்ல முற்பட்டுள்ளதேயொழிய பிரச்சினைகளுக்கான தீர்வில் எந்தவித அக்கறையும் காட்டவில்லை.

அதாவது ஒருபுறத்தில் யுத்தநிறுத்த உடன்பாட்டை அரசாங்கம் உரிய விதிமுறைகளுக்கு ஏற்ப அமுலாக்கம் செய்யாமையும், தமிழ் மக்களின் பிரச்சினைகள் நெருக்கடிகள் என்பவற்றினைத் தீர்க்கும் வகையில் முயற்சிகள் எவையும் மேற்கொள்ளாமையுமே இன்று யுத்தநிறுத்த உடன்பாடு பெரும் நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளமைக்கும் யுத்தம் வருமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளமைக்கும் காரணமாகும்.

அதாவது கொலைகள் வன்முறைகள் யுத்தநிறுத்த உடன்பாட்டு விதிமுறைக்கு முரணானவை என்பது உண்மையே. ஆனால், அதற்குப் பொறுப்பேற்க வேண்டியவர்கள் யுத்த நிறுத்த உடன்பாட்டை முழு அளவில் அமுல் செய்யாது அதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்குகின்றவர்களே. அதாவது வன்முறைக்கானதொரு சூழலை உருவாக்கிய சிறிலங்கா அரசாங்கமே இதற்கான பொறுப்பை ஏற்கவேண்டும். ஆனால் இதனைக் கருத்திற் கொள்வது அரசாங்கம் தனது நடவடிக்கைகளைத் தொடருமேயானால் ஹொவ்டே கூறியது சரியான எதிர்வு கூறலாகவே இருக்கும்.

# சனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ சுயமாக எதுவும் செய்யமுடியாதவர்

### -தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் ரணில் தெரிவிப்பு

(திருமலை)

ஜே.வி.பி யின் கருத்துக்களுக்கு மட்டும் செவிசாய்க்கும் சுதந்திரக் கட்சியின் சனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ சுயமாக எதுவும் செய்ய முடியாதவர் என ஐக்கிய தேசியக்கட்சியின் சனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

திருகோணமலை நகரில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மாகாண சபைகளை எதிர்த்து பல ஆயிரம் உயிர்களையும் கோடிக் கணக்கான சொத்துக் களையும் அழித்த ஜே.வி.பியினர் இன்று அதே மாகாண சபைகளில் அங்கத் துவம் பெற்றுள்ளனர்.

தாங்கள் மாகாணசபைத் திட்டத்தை முன்னர் எதிர்த்தது தவறு என்பதை அவர்கள் இன்று உணர்கிறார்கள்.

அதேபோல தற்போது ஐக்கிய தேசியக் கட்சி முன்வைத்துள்ள ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு என்ற விடயத்தை அவர்கள் நாட்டுப் பிரிவினை எனக்கூறி எதிர்க்கின்றனர்.

இந்த நிலையில் இதனையும் எதிர்கலத்தில் சரி என ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலை உருவாகும் என ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

ஆழிபேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணங்கள் குறித்த திட்டம் நாம் பதவிக்கு வந்து ஒரு வருடக்காலத்திற்குள் வழங்கப்படும் சோமவன்ச அமரசிங்கவிற்கு மகிந்த ராஜபக்ஷ பயம் என்பதன் காரண மாகவே இராணுவத்திற்கு எதிராக அவர் மேடையில் பேசிய போது மகிந்தவால் ஒன்றும் செய்ய முடிய வில்லை.

அதுவே எமது மேடையாக இருந்திருந்தால் சோமவன்சவை மேடையிலிருந்து அகலுமாறு பணித்திருக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்..

ரணில் விக்கிரமசிங்க மேலும் சொன்னதாவது; இனப் பிரச்சினைக்குத் தான் முன்வைக்கப் போகும் தீர்வு பற்றி மகிந்த கூறித்தான் ஆக வேண்டும் இல்லையேல் சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பு அவருக்கு கிடைக்காதுசமஷ்டிமுறை நாட்டைப் பிளவுபடுத்தும் என்றும் ஜே.வி.பி கூறுகின்றது. மாகாண சபைமுறை கொண்டு வரப்பட்டபோது ஜே.வி.பியினர். இவ்வாறுதான் கூறினார் மாகாணசபை முறைமை பிரிவினைக்கு வழி வகுக்கும் என்ற ஜே.வி.பியினர் இன்று அதனை ஏற்று அங்கம் வகிக்கின்றனர்.மாகாண சபை நாட்டைபிளவுபடுத்தியதா என்றும் கேட்கின்றேன் என்றார்.

(25,32)

# ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பை மகிந்தவின் தேர்தல் அறிக்கை கைவிடுகிறது?

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சுதந்திரக்கட்சி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் அறிக்கையில் சிறிலங்காவின் ஒற்றையாட்சிக் கோட்பாட்டின் கீழ் இனப்பிரச்சினைக்குத் தீர்வு, ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பை கைவிடுதல், யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீளாய்வு செய்தல் ஆகிய விடயங்களே இடம் பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த அறிக்கை நாளை வெளியிடப்படவுள்ளது. ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பு மற்றும் ஒற்றையாட்சி கோட்பாடு ஆகியவை தொடர்பில் மாற்றங்களைச் செய்யுமாறு சுதந்திரக்கட்சித் தலைவரும் சனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்க விடுத்த வேண்டுகோளை மகிந்த நிராகரித்துள்ளதாகவும் தெரிகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை இறுதி செய்யப்பட்ட மகிந்தவின் தேர்தல் அறிக்கையானது லண்டனில் உள்ள சந்திரிகாவுக்குஅனுப்பிவைக்கப்பட்டதாக சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. தமிழர்கள் தொடர்ந்து வலியுறுத்திவரும் தாயகம், சுயநிர்ணய உரிமைஆகியவற்றையும் மகிந்தவின்தேர்தல் அறிக்கை நிராகரித்துள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகள் பிரிவினையைக் கைவிட்டு, ஆயுதங்களைக் கைவிட்டு மைய சனநாயக நீரோட்டத்தில் இணையவேண்டும் என்று மகிந்த விரும்புவதாகவும் இது குறித்து தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் நேரடிப் பேச்சுக்களை நடாத்த உள்ளதாகவும் மகிந்தவின் தேர்தல் அறிக்கை தெரிவிக் கும் எனவும் கூறப்படுகிறது.

சமாதான வெளியுறவுக் கொள்கையை மகிந்த கடைபிடிக்க உள்ளதாகவும், இந்தியா,சீனா,ரஷ்யா, பாகிஸ்தான் நாடுகளுடனானஉறவை வலுப்படுத்த பேச்சுக்கள் நடாத்தப்படும் என்றும் மகிந்தவின்தேர்தல் அறிக்கைஉறுதியளிக்கலாம்எனவும்.

ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பைக் கை விட்டு விட்டு ஜலத்லங்கா திட்டத்தின் கீழ் வடக்கு கிழக்கு பிரதேசங்களை மீளமைக்க உள்ளதாகவும் வடக்கு கிழக்குமக்கள் அமைப்புகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கி இத்திட்டம் செயற்படுத்தப்படும் என்றும் மகிந்தவின் தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

தமிழீழவிடுதலைப்புலிகளுக்கு ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவைநிர்ணயித்து ஒருகுறிப்பிட்டசெயற் திட்டத்தைக் கையளிக்க உள்ள தாகவும் இது வெற்றிபெற்றால் அரசியல் யாப்பு திருத்தம் தொடர்பாக குழு அமைக்கப்படும் என்றும் தெரிவிக்கவுள்ள மகிந்தவின் தேர்தல் அறிக்கையில் புதிய அரசியல் யாப்பு குறித்து மக்கள் கருத்தறிய வாக்கெடுப்பு நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# சிங்கள பெருந்தேசியவாதிகளுடன் இணைந்துள்ள மகிந்தவுக்கு எவ்வாறு ஆதரவளிக்கமுடியும்?

### –மு.கா. தலைவர் ரவூப்ஹக்கீம் கேள்வி

(திருகோணமலை

தமிழருக்கு சுயநிர்ணயம் கிடையாது அவர்களுக்கு தாயகம் என்று ஒன்றில்லை. முஸ்லிம்களுக்கும் சுயநிர்ணயம் கிடையாது அவர்களுக்கும் தாயகம் ஒன்றில்லை என்றும் கூறுகின்ற சிங்களப் பெருந்தேசியவாத சக்திகளோடு இணைந்துள்ள மகிந்தராஜபக்ஷவுக்கு எவ்வாறு நாம் ஆதரவளிக்கமுடியும் என சிறி.மு.கா.தலைவர் ரவூப் ஹக்கீம் கேள்வி எடுப்பியுள்ளார்.

திருகோணமலை நகரில் நேற்று நடந்த ஐ.தே.க சனாதிபதித் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் ஐ.தே.க வேட்பாளர் ரணிலை ஆதரித்துப் பேசும் போது கேள்வி எழுப்பினார்.

ரவூப்ஹக்கீம் மேலும் கூறுகையில்,சிங்களப் பெரும் தேசியவாத சக்திகளாக ஜே.வி.பி, ஜாதிக ஹெலஉறுமய ஆகியவற்றின் ஆதரவைப் பெறுவதில்தான் மகிந்த ராஜபக்ஷ தீவிர அக்கறை காட்டினார். முஸ்லிம் காங்கிரஸ்இ.தொ.கா ஆகியவற்றின் ஆதரவுஇன்றி மகிந்தவை வெல்லவைப்போம் என்று ஜே.வி.பி கூறி சிறுபான்மை இனங்களின் கட்சிகளை ஏளனம்செய்தது.

மகிந்தராஜபக்ஷ தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வெளிநாட்டு தலையீடு இன்றி பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று கூறியிருக்கின்றார்.

யுத்தநிறுத்த உடன்படிக்கை சமாதானப்பேச்சுவார்த்தை ஆகியவற்றுக்கு வெளிநாட்டு அனுசரணைதான் பெறப்பட்டது. வெளிநாட்டு அனுசரணைக்கும் வெளிநாட்டுத்தலையீட்டுக்கும் அர்த்தம் புரியாமல் மகிந்த பேசுகிறார்.

சனாதிபதித்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளிப்பது தொடர்பாக இறுக்கமான உடன்பாடு கண்டுள்ளோம். தமிழ் மக்களுக்கு அவர்களின் வாழ் விடங்களுக்கு வழங்கப்படும் சுயாட்சி போன்று முஸ்லிம் மக்களுக்கும் அவர்களின் வாழ்விடங்களில் சுயாட்சி வழங்கப்படவேண்டும்.சமாதானப்பேச்சு முஸ்லிம்கள் தனித்தரப்பாக பங்குபற்ற வேண்டும். இவையனைத்தும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

இதுவரை நடந்த சமாதானப் பேச்சுக்களில் யாருமே பலமடையவில்லை. தமிழர் முஸ்லிம்கள் அனைவருமே பலவீனம் தான் அடைந்துள்ளனர். சமாதானம், அரசியல் தீர்வு என்பது இரவோடு இரவாக வராது பல ஆண்டுகளாகப் பேசியே அதனையடையாளம்.

ஐ.தே.க சனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க யதார்த்த பூர்வமான அணுகுமுறையை கடைப்பிடித்து வருகிறார். அவரால்தான் தேசியப் பிரச்சினைக்கு சகலரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வைக் காண முடியும். வெளிநாட்டு அனுசரணை இன்றிஎந்த நாட்டினதும் உள்நாட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டதாக வரலாறு கிடையாது என்று ரவூப் ஹக்கீம் கூறினார்.

(25)

# ஐரோப்பிய ஒன்றியத்தின் புலிகள் மீதான நடவடிக்கை தமிழ் சமூகத்தின் மீதான நடவடிக்கையாகவே அமையும்

## -வவு. தமிழர் ஆசிரியர் சங்கம்

(வவுனியா)

தமிழீழ விடுதலைப்புலிகளைப் பயணத் தடை செய்வது என்பது ஒட்டு மொத்த தமிழ் சமூகத்தையும் தடைசெய்வதாகவே அமையும். ஐரோப்பிய ஒன்றியத்தின் இச் செயலைவன்மையாகக் கண்டிக்கிறோம் என இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் வவுனியா கிளையினர் தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியத்திடமும் ஏனைய சர்வதேச நாடுகளிடமும் மிகவும் காத்திரமான வேண்டுகோள் ஒன்றினை விடுக்கின்றோம்.

அதாவது காலம்காலமாக எமது தமிழ்ச் சமூகம் அனுபவித்து வரும் துன்ப துயரங்களுக்கு மேலும் சுமை சேர்க்கும் விடயங்களாக ஐரோப்பிய சமூகமும் ஏனைய சில மேலைத் தேய நாடுகளும் புலிகளுக்கு எதிரான பிரயாணத்தடையினை ஏற்படுத்தியுள்ளது.

இதனை உடனடியாக நீக்கி விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை நடத்தி இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வினை ஏற்படுத்த உலக நாடுகள் சிறிலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். சர்வதேச சமூகம் நேரடியாகத் தமிழர் தாயகப் பிரதேசங்களுக்கு விஜயம் செய்து பொது அமைப்புக்களுடன் சந்திப்பினை மேற்கொண்டு உண்மை நிலைமைகளை அறிந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அச்சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை வவுனியா மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் பல தசாப்தங்களாக சிங்கள பேரினவாதமும் அது சார்ந்த இலங்கை அரசும் எமது தமிழ் மக்கள் மீது திட்டமிட்ட வகையில் அடக்குமுறைகளை ஏற்படுத்தி வருகின்றது. இந்த அதிகார வேலைக்கு வலுவூட்டும் வகையில் சிங்களப் பேரினவாதம் மேற்கொள்ளும் விசமப்பிரச்சாரத்தினால் தமிழ் பேசும் மக்களின் ஏகபிரதிநிதிகளாகிய தமிழீழ விடுதலைப் புலிகளை ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகளுக்குப்பயணம் மேற்கொள்ள ஐரோப்பிய ஒன்றியம் தடை விதித்தது இது.

தமிழ் பேசும் மக்களை பெரும் விரக்திக்கு உள்ளாக்கியுள்ளது.

இதனால் சமாதானப் பேச்சுக்களுக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது. இத்தடையானது இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகளின் தேக்கத்தினையும் பாதிப்பினையும் ஏற்படுத்திவிடுவதாக அமைகின்றது. எனவே சிங்களப் பேரினவாதத்தின் இனச்சுத்திகரிப்புக்கு ஆதரவாக ஐரோப்பிய ஒன்றியம் செயற்படுமாக இருந்தால் ஐரோப்பிய ஒன்றியம் மீதான நம்பிக்கையைத் தமிழ் மக்கள் இழந்து விடுவார்கள் என்பதை மிகக் கவலையுடன் சுட்டிக் காட்டுவதுடன் இத்தடையை வவுனியா மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத்தினராகிய நாம் மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம். எனவே ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் எமது தாயகப் பிரதேசங்களுக்கு விஜயம் மேற்கொண்டு எமது பிரதேசத்தின் உண்மை நிலையைப் புரிந்து கொள்ள வேண்டும் எனக்கேட்டுக் கொள்வதுடன் உடனடியாக எமது ஏக பிரதி நிதிகளாகிய தமிழீழவிடுதலைப்புலிகள் மீது விதித்துள்ள தடையை நீக்கி எமது நியாயபூர்வமான விடுதலைப் போராட்டத்திற்கு அங்கீகாரத்தினை வழங்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம். (10)

# ஊடகவியலாளர் நிமலராஜனின் ஐந்தாம் ஆண்டு நினைவுதினக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் ஐந்தாம் ஆண்டு நினைவுதினக் கூட்டம் நாளை பகல் 10.00 மணிக்கு பரமேஸ்வராச் சந்தியில் உள்ள சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையில் யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கத் தலைவர் வே.தவச்செல்வம்தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நினைவுதினக் கூட்டத்தில் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள் பத்திகையாளர்கள் எனப்பலரும் கலந்துகொண்டு நினைவுரைகளை ஆற்றவுள்ளனர்.

# ஒப்பந்த ஆங்கில ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஒப்பந்த அடிப்படையில் பாடசாலைகளில் பணியாற்றும் ஆங்கில ஆசிரியர்களுக்கு நிரந்தரமான நியமனத்தை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு வடகிழக்கு மாகாண புதிய ஆங்கில ஆசிரியர் சங்கத்தினர் மாகாண கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகளிடம் வேண்டுகோள் ஒன்றைவிடுத்துள்ளதாகத் தெரிய வருகிறது.

யாழ்ப்பாணம் வவுனியா போன்ற மாவட்டங்களில் பணியாற்றும் ஒப்பந்த ஆசிரியர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள், அதன் இடர்பாடுகள் குறித்தும் வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் அதிகாரிகளிடம் சங்கத்தினரால் தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. (28)

# பதிவு செய்யக் கோரிக்கை

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் பட்டதாரி பயிலுனர்களாகக் கடமையாற்றி வந்த ஆசிரியர்களில் இதுவரை நிரந்தர நியமனம் கிடைக்காதவர்கள் தமது பெயர்களை தென்மராட்சி வலயக் கல்விஅலுவலகத்தில் உடனடியாகப் பதிவு செய்யுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதிறெஜினா இருதயநாதன் தெரிவித்துள்ளார். (28)

# பொலிஸ் துணைப்படையைச் சேர்ந்த 81 ஆயிரம் பேர் தேர்தல்கால பணியில்

தேர்தல் காலத்தில் பொலிஸ் மற்றும் துணைப்படையினைச் சேர்ந்த சுமார் 81ஆயிரம் பேர் ஈடுபடுத்தப் பட்டுள்ளதாக தேர்தல் செயலக பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரத்ன தெரிவித்துள்ளார்.

இது குறித்து காமினி நவரத்ன கூறியதாவது,

தேர்தல் நாளன்று வாக்களிப்பு நிலையங்கள், வாக்குகள் எண்ணும் நிலையங்கள், வாக்குப் பெட்டிகளை எடுத்துச் செல்லல், ரோந்து நடவடிக்கைகள் மற்றும் கலகங்கள் நடைபெறும் இடங்களில் இவர்கள் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப் படுவார்கள்.

ஏதேனும் வன்முறைகள் இடம் பெறுமானால் அந்த இடங்களில் இராணுவத்தினரை ஈடுபடுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

தேர்தல்கடமைகளில் ஈடுபடுத்தப் படவுள்ள பொலிசார் பக்கச்சார் பின்றி செயற்படவேண்டுமென அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தங்களின் கடமைகளைச் சரிவர நிறைவேற்றத் தவறும் அதிகாரிகளுக்கெதிராக ஒழுங்கு நடவடிக்கைளை எடுக்கவும் பொலிஸ்மா அதிபர் பணிப்புரை விடுத்துள்ளார் என்றார் அவர்.

# யாழ். மாவட்டத்தில் வாக்காளர் அட்டைகள் விநியோகம்

சனாதிபதித் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் விநியோகம் எதிர் வரும் 26 ஆம்திகதி முதல் வழங்கப்பட இருப்பதாக யாழ்.மாவட்டதேர்தல் திணைக் களம் தெரிவித்துள்ளது.

சுனாமி கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குஅடுத்த மாதம் முதல் வாரம் அளவில் வாக்காளர் அட்டைகள் விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (28)

# முஸ்லிம்தொழுகை முறைக்கு எதிராக பௌத்தசாசன பரிந்துரையைக் கண்டிக்கிறோம்

## -திருமலை தமிழ்மக்கள் பேரவை

(திருமலை)

இஸ்லாமிய மத விழுமியங்களுக்கும் தொழுகை முறைகளுக்கு எதிரானதுமான பௌத்த சாசன ஆணைக்குழுவின் பரிந்துரையைத் தாம் கண்டிப்பதாக திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பேரவை நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றில் சனாதிபதி இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் எனக் கோரப் பட்டுள்ளது.

தமிழ்பேசும் மக்கள் என்ற வகையில் இஸ்லாமிய மக்களுக்கு எதிரான இந்த நடவடிக்கையைத் தாம் கண்டிப்பதாக திருகோணமலையில் தமிழ்மக்கள் பேரவை தெரிவித்துள்ளது.

# ராஜபக்ஷவின் பிரகடனம் நாளை வெளியீடு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் கொள்கைப் பிரகடன வெளியீடு நேற்று நடைபெறவிருந்த போதும், பின்னர் நாளைய தினத்திற்கு ஒத்தி வைக்கப் பட்டுள்ளது.

தேர்தல் கொள்கைப் பிரகடனம் நேற்றுஅலரிமாளிகையில் மத வழிபாட்டுடன் வெளியிடப்பட்டு, அதன் பிரதிகள் சுதந்திரக் கட்சியின் தலைவர்களுக்கும் மற்றும் கூட்டணிக் கட்சிப் பிரமுகர்களுக்கும் வழங்க முடிவு செய்யப்பட்டிருந்தது. அதற்கேற்ப கொழும்பில் அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாடொன்றில் சுதந்திர முன்னணியின் சனாதிபதி வேட்பாளரின் பேச்சாளர் அமைச்சர் மங்கள சமரவீரவும் நேற்று தேர்தல் கொள்கைப் பிரகடனம் வெளியிடப்படும் என அறிவித்திருந்தார்.

எனினும் இறுதி நேரத்தில் யாவும் இடைநிறுத்தப்பட்டு நாளை இது வெளியிடப்படவுள்ளது என அறிவிக் கப்பட்டுள்ளது.

# அடிக்கல் நாட்டல்

(முள்ளியவளை)

நியாப் II திட்டத்தின் கீழ் முள்ளியவளை கிழக்குகிராம அலுவலர் பிரிவில் பொதுநோக்கு மண்டப அடிக்கல் நாட்டு விழா நிகழ்வு சிறப்புற இடம்பெற்றுள்ளது.

கடந்த புதன்கிழமை முற் பகல்.9.30 மணிக்கு முள்ளியவளை கிழக்கு கிராம அபிவிருத்தி சங்க தலைவர் க.சிவானந்தம் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. (ஆ)

# வட்டக்கச்சி பிரதேச பாடசாலைகளின் புலமைப் பரீட்சைப் பெறுபேறுகள்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் ஆண்டு-5 புலமைப் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களின் விபரம்:-

இராமநாதபுரம் மகாவித்தியாலய மாணவர்கள் நடராசா- கதீசன் 159, மித்திரன்- யதுர்ஷா 143, அன்ரனிதாஸ் - எழில்மதி 140 கோபாலராசா- விதுர்சன் - 138,கிருஸ்ணபவான்-லக்சனா 136,சின்னராசா - ஜனார்த்தி134, கிருபாகரன் - ஜனார்த்தனன் 133, இராஜேஸ்கரன் - பிரசாத் 132 சதீஸ்வரன் ஜங்கரன் 130, லோறன்ஸ் திரைன்ஸ் நிசாந்130

வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் ஜெ.நிதர்சனா 135 புள்ளி இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலையில் இராசேந்திரம் ஜசிந்தா 130 புள்ளிகளைப் பெற்று புலமைப் பரீட்சையில் சித்தியெய்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (12)

## வவு...

கல்வியியற் கல்லூரி ஆசிரியர்ப் பயிலுனர்கள் யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வவுனியா மாவட்ட மகளிர் அரசியல்துறைப்பொறுப்பாளர் செல்வி. அலை தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் இறுதியில் அரசறிவியற் கல்லூரி அதிபர் அரசண்ணா, வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஞானம் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.இதேவேளை வவுனியா மாவட்ட அரச திணைக்களங்களின் தலைவர்கள் இன்று காலை பத்து மணிக்கு கனகராயன்குளத்தில் புலிகளின் வவ்னியா மாவட்ட அரசியல்துறையினரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

கனகராயன்குளம் நியாப் மண்டபத்தில் நடைபெறவுள்ள இச் சந்திப்பில் எதிர்வரும் 27ஆம் திகதி வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெறவுள்ள தமிழ் தேசிய எழுச்சி நாள் தொடர்பாக கலந்துரையாடப்பட உள்ளது.

இதேவேளை தமிழ் தேசிய எழுச்சி நாள் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் வகையில் வீடு வீடாகப்பரப்புரைகள் செய்யப்பட வுள்ளன.எதிர்வரும் 24ஆம் திகதி முதல் நடைபெறவுள்ள இப்பரப்புரைச் செயற்பாடுகளில் வவுனியா மாவட்ட கல்வி அதிகாரிகளும், அதிபர்களும் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரியப்பயிலுநர் களும்,யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவர்களும் கலந்து கொள்ளவுள்ளதாக எழுச்சிச்செயலணியினர் தெரிவித்துள்ளனர். (10)

## விகாரைக்கு...

குண்டு சி-4 வகையிலானது என்றும் பொலிசார் தெரிவித்தனர்.

இதனையடுத்து அப் பிரதேசத்தில் உள்ள வீடுகளில் தீவிர தேடுதல் நடவடிக்கையை இராணுவத்தினர் மேற்கொண்டனர்.

## தமிழ்...

பல்கலைக்கழக சமூகவியற் துறை பேராசிரியர் என். சண்முகலிங்கன்,பேராசிரியர் வி.பி.சிவநாதன் திரைநீக்கம் செய்து வைத்தார். சட்டத்தரணி பொன் பூலோகசிங்கம் பேராசிரியர் என். சண்முகலிங்கன் மூத்த பத்திரிகையாளர் எஸ்.எம். கோபாலரத்தினம் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

மூத்த பத்திரிகையாளர் கோபு எஸ்.எம். கோபால ரத்தினம் அவர்கள் இதன் தலைவராக கடமையாற்றுகின்றார். இந்தநிறுவனத்துடன் 0094 2229545 என்றதொலைபேசி இலக்கத்துடனோ Info@tnitcentre.com என்ற மின்னஞ்சல் முகவரியுடனோ தொடர்பு கொள்ளலாம்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.